மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

உணவு உற்பத்தியை பெருக்க வகையற்ற சர்க்கார் கார்களை உற்பத்தி செய்யப் போகிறார்களாம்!

மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 2 — 1-5-60 — ஒலி 26

யார் வேண்டும்? சம்பத்தா? வெங்கட்ராமனா?

நமது பெருந்தலைவர்களில் ஒருவரான திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்களுக்கு "அரசியல் ஞானமில்லை, நாட்டின் நிலையறியும் சக்தியுமில்லை" என எடுத்துக் காட்டும் வகையில்—சென்னை தொழில் அமைச்சர் கனம் வெங்கட்ராமன் பேசி தலைகுனிந்த நிகழ்ச்சி உண்மையிலேயே வருந்தத்தக்க நிகழ்ச்சியாகும்! வருந்தத்தக்க நிகழ்ச்சி என்று சொல்லுவதைவிட, வேதனையும், வெட்கமும் கலந்த நிகழ்ச்சி என்றே சொல்ல வேண்டும்!

ஒரு நாட்டின் தொழில் அமைச்சர் பொறுப்பற்ற முறையில், எதையும் புரிந்து கொள்ளாமல் பேசுவது. நாட்டின் நிலையை அறிந்து கொள்ளாமல் பேசுவது அவருக்கு மட்டுமல்ல நாட்டுக்கே இழுக்காகும்!

திரு. ஈ. வி. கே. சம்பத், "சேலத்து இரும்பைக் கொண்டு இங்கிலாந்தில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது" என்று தென்னாட்டுப் பெருமையைப் பேசி, தென்னாட்டுக் கனி வளங்களைக் காட்டி "அந்தத் தென்னாடா இந்தத் தென்னாடு" என்று மேடை தோறும் முழக்கம் செய்து மக்களைத் தட்டி எழுப்பி காங்கிரஸ் அமைச்சர்களை கையாலாகாதவர்கள் என்று எடுத்துக் காட்டி வருகிறார்!

"இது உண்மை தானா?" என்பதுபற்றி பொறுப்புள்ளவர்களுக்குப் பலத்த சந்தேகம் ஏற்பட்டது!

"சேலத்து இரும்பைக் கொண்டு இங்கிலாந்தில் பாலம் கட்டப்பட்டதாக ஒரு பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினர் பேசி வருகிறாரே, அது உண்மையா? அது பற்றி இந்த அராங்கத்திற்கு தகவல் தெரியுமா?"

என்று சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு வேதரெத்தினம் சட்டசபையில் கேட்டார்!

அந்த பாராளுமன்ற உறுப்பினரின் பேச்சு சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது! அந்தக் கூற்று ஆதாரமற்றது, நான் அதிகாரிகளையெல்லாம் கூட அது பற்றி விசாரித்தேன். அதற்கு ஒன்றும் ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை, "சேலம்" என்ற பெயரில் வெளி நாடுகளில் பல இடங்கள் இருக்கின்றன! ஒருக்கால் வேறு ஏதேனும் "சேலம்" என்ற இடத்தில் இரும்பு கிடைத்ததாகச் சொல்லப்பட்டிருக்கலாம்! அதை வைத்துக் கொண்டு நம் நாட்டு சேலம் தான் அது என்று கருதி அவர் அப்படி பேசி இருக்கக் கூடும்!" என்று, தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் திரு, வேதரெத்தினம் அவர்களுக்குப் பதில் சொல்லி இருக்கிறார்!

நமது சொல்லின் செல்வர் திரு. சம்பத் அவர்கள் புரியாமல் பேசி வருகிறார்? "இந்த சேலத்திலிருந்து இரும்பை வெட்டி எடுத்து, அதை இங்கிலாந்து நாட்டிற்குக் கொண்டு போய் பாலம் கட்டவில்லை. அவர் எந்த சேலத்தை வைத்துக் கொண்டோ அப்படி பேசி வருகிறார்" என்ற பொருள் படும்படி தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் பதில் சொல்லி இருக்கிறார்!

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு முன்பும், அதற்குப் பின்பும்—இல்லை—இல்லை—நாமெல்லாம் அரசியல் வாழ்க்கையில் ஈடுபடத் துவங்கிய காலத்திலிருந்தே தென்னாட்டுக் கனி வளங்களைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்து வந்திருக்கிறோம்!

நாம். "சேலத்தில் இரும்பு இருக்கிறது" என்று சொன்னோம்! காந்தியவாதிகள் "இரும்டா?" என்று கிண்டல் செய்தார்கள்!

"காவிரி வட்டத்தில் எண்ணெய் இருக்கிறது" என்று கூறினோம்! "வட்டத்தில் இருக்கிறதா? கிண்ணத்தில் இருக்கிறதா?" என்று உதட்டைப் பிதுக்கி கேலி செய்தார்கள்! நீங்களென்ன ஆராய்ச்சி நிபுணர்களா? வட்டத்திலும் கிண்ணத்திலும் இரும்பைக் கண்டு பிடிக்க" என்று கை கொட்டி சிரித்தார்கள்!

இன்று "சேலத்தில் இரும்பு இருக்கிறது, காவேரி வட்டத்தில் எண்ணெய் இருக்கிறது, நெய்வேலியில் நிலக்கரி இருக்கிறது" என்று கூறுகிறார்கள்!

"சேலத்து இரும்பைக் கொண்டு இங்கிலாந்து நாட்டில் பாலம் கட்டி இருக்கிறார்கள்" என்று கூறினால் அது இந்த சேலமாக இருக்காது என்று" தொழில் அமைச்சர் பதில் சொல்லுகிறார்! இப்படியொரு பதிலை சொல்ல தொழில் துறை அதிகாரிகளும் உதவி புரிந்திருக்கின்றனர்!

"சேலத்தில் இரும்பு இருந்தது, அந்த இரும்பைக் கொண்டு ஆங்கில நாட்டில் பாலமும் கட்டி இருக்கிறார்கள்" என்பதற்கு பல்வேறு ஆதாரங்கள் இருக்கின்றன!

ஆக்ஸ் போர்ட் பல்கலைக் கழகத்தில் வெளியிடப்பட்ட "இந்தியாவின் கனி வளங்கள்" என்ற நூலில் இது விரிவாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்டிருக்கிறது!

இந்த நூலை யார் படித்தாலும் படிக்கா விட்டாலும், தொழில் அமைச்சர் கட்டாயம் படித்திருக்க வேண்டும்! தொழில் அமைச்சருக்கு ஆங்கிலம் தெரியும் எனவே இதை சுலபமாக யாருடைய உதவியுமின்றி படித்துத் தெரிந்துக் கொண்டிருக்கலாம்! ஆனால் தொழில் அமைச்சர் இதை படிக்காமலேயே பொறுப்பற்ற முறையில் பேசி நமது சம்பத் அவர்களிடம் குறைகாண முன் வந்திருக்கிறார்!

காந்திய வாதிகள் தானாகவும் தெரிந்து கொள்வதில்லை, பிறர் சொன்னாலும் அதை கேட்பதில்லை! நம்மை குறை கூறிட மட்டும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்!

"திராவிட முன்னேற்றக கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு அரசியல் தெரியாது—அடுக்கு மொழி தான் தெரியும்! பொருளாதாரம் புரியாது—அவர்களுக்கு பொருளாதாரம் சினிமா தான்! திட்டங்கள் தெரியாது—அவர்களுக்கு திட்டமெல்லாம் சினிமாவுக்கு போடுகின்ற 'செட்டு'கள் தான்!" என்று மேடையில் முழங்கி வரும் காந்திய வாதிகள், வெங்கட்ராமன் கொடுத்த இந்த பதிலுக்கு என்ன சொல்லப் போகிறார்கள்!

நாட்டைப் பற்றி யறியாதவர்கள், நாட்டில் தொழில் நிலையைப் பற்றித் தெரியாதவர்கள், கனிவளங்களைப் பற்றி புரியாதவர்கள் தொழில் அமைச்சராக அமர்ந்து கொண்டு கேலி பேசுவது இந்த நாட்டில் மட்டும் தான் முடியும்!

தொழிலைப் பற்றி தெரியாதவர்களெல்லாம் தொழில் மந்திரியாகவும், தொழில் துறை அதிகாரிகளாகவும் இருந்தால் இந்த நாடு வளம் பெறுவது தான் எப்படி?

இதைப் பற்றி பொது மக்கள் தான் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும்!

நாட்டின் உண்மை நிலையை யார் எடுத்துக் கூறி வருகிறார்கள்? உண்மையிலேயே சிந்தித்துப் பாருங்கள்!

நாட்டைப் பற்றி யார் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்? தொழில் அமைச்சராக அமர்ந்திருக்கும் **கனம் வெங்கட்ராமனா?** பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் **திரு. சம்பத்தா?**

"நம்முடைய நாடு, நம்முடைய மக்கள்" என்று எண்ணுபவர் திரு. சம்பத்!

"வடக்கும், தெற்கும் ஒன்று தான் எது வாழ்ந்தாலும் நன்று தான்" என்று என்பவர் திரு வெங்கட்ராமன!

"தென்னாடு வளம் குலுங்கும் நாடு' இந்நாட்டிற்கு எந்நாடு ஈடு! என்று பெருமை பேசுபவர் நமது சம்பத்!

"எல்லாம் அடுக்கு மொழி! எல்லாம் அடுக்கு மொழி" என்று கிண்டல் செய்து தட்டிக் கழிப்பவர் திரு. வெங்கட்ராமன்!

சேலத்தில் இரும்பு உண்டு! அந்த இரும்பால் ஆங்கிலேயன் பாலம் கட்டி இருக்கிறான்! நாம் மட்டும் இளித்தவாயர்களா என்று கேட்பவர் திரு சம்பத்!

"ஆதாரமற்றது! அது ஆதாரமற்றது" என்று உண்மையை மறைப்பவர் திரு. வெங்கட்ராமன்!

முன்னவர் விடுதலை வீரர்! பின்னவர் அடிமை விரும்பி!

இதில் யார் வேண்டும் உங்களுக்கு?

திரு. சம்பத் மக்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்!

திரு. வெங்கட்ராமன் மன்னர்கள் கட்சியை சார்ந்தவர்!

எந்தக் கட்சி வேண்டும் உங்களுக்கு? உடனே முடிவு செய்யுங்கள்!

"அன்பு மொழி பேசி ஆறுதல் பல கூறி மக்களை வாழ்விக்கும் வித்தகர் அறிஞர் அண்ணாவே எங்கள் குல தலைவர்" என்று முழக்கம் செய்தால் திரு. வெங்கட்ராமன் நம்மையோ, நமது சம்பத் அவர்களையோ உண்மையை மறைத்து கேலி செய்ய மாட்டார்!

இந்த நிலையை உண்டாக்குங்கள்! ஆமாம்! 1962-ல் கிடைக்கிற வாய்ப்பை இழந்து விடாதீர்கள்!

திராவிடம் விடுதலை பெற எல்லாம் அறிந்தவர்கள் ஆட்சி பீடம் ஏறி நாட்டுக்கு நல் வாழ்வை உண்டாக்க வழி செய்யுங்கள்!

சென்னை

மந்திரிகளே! ராஜினாமா செய்யுங்கள்!

மரியாதை இழந்து அந்தப் பதவியை வகிப்பானேன்?

அதைக் காப்பற்றத் திறமையுள்ளவர்கள் அங்கு போகட்டும்! நாட்டுக்கு நல்ல புகழைத் தேடித்தரட்டும்!

சென்னை மந்திரிகளுக்கு சொல்லின் செல்வர் சம்பத் சொல்லும் புத்திமதி!

சென்னை 64-வது வட்டம் ஆங்கா நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 10-ம் ஆண்டு விழா, நைனியப்ப மேஸ்திரி தெருவில் 18 4 60ம் தேதியன்று நடைபெற்றது பல தோழர்கள் இயக்கப் பாடல்கள் பாடினார்கள்.

இந்த வட்டத்தில் காங்கிரஸ் கூட்டங்கள் பல நடந்திருந்தும், நமது கூட்டத்திற்கு போலீஸ் அனுமதி கொடுக்க அதிகாரிகள் மறுத்து விட்டார்கள்,

தெருவில் மேடை யமைத்து கூட்டம் போட அனுமதியில்லை. ஆனாலும் அந்தத் தெருவிலுள்ள ஒரு வீட்டின் மாடியில் ஒலி பெருக்கி அமைத்து, பல தெருக்களிலும் பேச்சு கேட்கும் வண்ணம் வசதிகள் செய்யப்பட்டிருந்தன,

அந்த இடம் நெருக்கடியாக இருந்தாலும் ஏராளமான மக்கள் கூடியிருந்தார்கள்.

கூட்ட ஆரம்பத்தில் சென்னை மாவட்ட முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரும், இயக்கத்தின் முக்கியமானவர்களில் ஒருவரும், இந்தவட்டத்தில் கழகப் பணியாற்றிவருபவருமான தோழர் கே. கோவிந்தசாமி இந்த வட்டத்தில் கழகம் ஆற்றும் பணியைப் பற்றியும், நமது கூட்டங்களுக்கு அனுமதி கொடுப்பதில் ஆட்சியாளர்கள் செய்யும் தொல்லைகளைப் பற்றியும் விளக்கி கூறினார் கூட்டத்திற்கு வட்டத்து நகர மன்ற உறிப்பினர் திரு.ராமதாஸ் தலைமை தாங்கினார், தலைவர் முன்னுரையாகப் பேசியபின்,

"நம்நாடு" துணை ஆசிரியர் தோழர் ஆர். எஸ். பாண்டியன், கழக வளர்ச்சியைப் பற்றியும், மாற்றார் தூற்றுதலைப் பற்றியும் பேசினார்.

பின் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரும், டில்லி மக்கள் சபை உறுப்பினருமான சொல்லின் செல்வர் ஈ. வெ. கி, சம்பத் அவர்கள் பேசியதாவது.

அன்புள்ள தலைவர் அவர்களே! எனது மதிப்பிற்குரிய தோழர் கோவிந்தசாமி அவர்களே! நண்பர்களே! தாய்மார்களே!

இன்று இங்கு கூட்டம் நடைபெறுவதற்கிருந்த தொல்லைகள் பற்றி எனக்கு முன் பேசியவர்கள் தெரிவித்தார்கள். இன்று இங்கு கூட்டம் நடக்கும் விதத்தைக் காணும்போது விசித்திரமாகத் தான் இருக்கிறது, இங்கு பேசுவதற்கு மேடை இல்லை! நான் மாடியிலிருந்து பேசுகிறேன், நீங்கள் கீழே இருந்து கேட்கிறீர்கள்.

நமது திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி வரும் விஷயங்களை பலர் பல கோணங்களில் பார்க்கிறார்கள்.

ஆனால் அதை பயன்படும் முறையில் பார்க்க வேண்டும், நமது தோழர் பாண்டியன்

பேசும் போது நாம் சொல்லும் கருத்துக்கள் எவ்வளவு நியாயமானது என்பது பற்றிக் கூறினார்.

நாம் கூறிவரும் கருத்துக்கள்—லட்சியங்கள் எளிதானது மிகவும் சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடியது. யார், யார் எப்படி நினைத்தாலும், கருதினாலும் நாம் கூறுவதைத் தொடர்ந்து கூறிவருகிறோம். அது தான் பெருமை என்று நினைக்கிறோம். நியாயமானது என்று எண்ணுகிறோம்.

மற்றும் மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தனது லட்சியத்தை எளிய முறையில் புரிந்து கொள்ளச் செய்து வருகிறது.

ஆனால் ஒரு சிலர் தங்களைப் பேரறிவாளர்கள் என்று நினைத்துக் கொண்டு மற்றவர்கள் என்ன கூறுவார்களோ என்று கூச்சப்பட்டுக் கொண்டு நியாயமானது என்று தெரிந்தும் கூறாமலிருக்கின்றனர்.

நாமோ கூறுவதால் வரும் விளைச்சலைப் பற்றியோ, பலனைப் பற்றியோ கவலைப் படாது துணிவோடு எடுத்துக் கூறி வருகிறோம், அப்படி மக்களிடம் எடுத்துக் கூறுவது நமது கடமை என்று கருதுகிறோம்.

நாம் இன்று செய்து வரும் பணி—நாம் மக்களிடம் கூறி வரும் கருத்துக்கள் நமது தென்னகம் விடுதலை யடைய வேண்டுமென்பதே.

இந்த நாடு வெள்ளையனிடமிருந்து விடுதலை பெற்றிருக்கிறதென்று கூறப்படுகிறது. அது உண்மை தான், ஆனால் நாம் விடுதலை அடையவில்லை. நான் இப்படிக் கூறுவதால் பலருக்கு ஆத்திரம் ஏற்படலாம். நாம் துவேஷ உணர்ச்சியைப் புகுத்துகிறோம் என்று கூறலாம்,

ஆனால் நாம் கூறுவதைச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் இரண்டு தரப்பட்ட மக்கள் இருக்கிறார்கள்.

உரிமையோடும், ஜனநாயக முறையோடும் எல்லாவற்றையும் அனுபவித்து வருபவர்கள் ஒரு வகையினர்.

எல்லா வகையிலும் ஒதுக்கப்பட்டு, கீழே தள்ளப்பட்டு, தாழ்வான முறையில் வாழ்பவர்கள் இரண்டாம் தரப்பட்டவர்கள்,

அப்படி இருப்பவர்கள் தென்னகத்திலிருக்கும் நாம் தான். இதைத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் மக்களிடம் எடுத்துக் கூறி வருகிறது. அதை மக்கள் உணரும்படி செய்து வருகிறது.

இன்று தென்னகத்திலிருக்கும் ஒரு சிலர் தங்களை மந்திரிகள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் நிலை என்ன அவர்களுக்குள்ள அதிகாரங்கள் என்ன என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. அவர்கள் டில்லியிலிருப்பவர்களுக்கு விண்ணப்பம் போடுகின்றவர்களாகத் தான் இருக்கிறார்கள்

அவர்கள் தாங்களாகவே எதுவும் செய்யும் தகுதி கொண்டவர்களாக இல்லை. அவர்களே பரிகாரம் தேடிக் கொள்ளும் சக்தி படைத்தவர்களாக இல்லை.

இப்படி நான் கூறுவதற்கு வாதங்கள் செய்து விட்டால் மட்டும் போதாது—தங்கள் உள்ளத்தைத் தொட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

நான் டில்லிக்கு உங்களுடைய ஆதரவால், உங்களது பலத்தால், திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் சென்றேன்.

அங்கு இருக்கும் நிலைமைகளையும், அங்கு நடைபெற்று வருவதையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன்.

எனக்கு டில்லியிலிருந்து ஒரு கடிதம் வந்தது, அந்தக் கடிதம் சென்னையிலிருந்து டில்லிக்கு போய் அங்கிருந்து இங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் மந்திரிகள் டில்லியிடம் எதையும் கேட்பதில்லை ! எதிர்ப்பதுமில்லை !

உணவு மண்டலத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லையாம் ! மைல்கற்கள்இந்திபற்றியும் இவர்கள் எதிர்க்கவில்லையாம் !

(சம்பத் பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்திருக்கிறது. அது நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம் டில்லிக்கு வரும் நிகழ்ச்சியை குறிக்கும் கடிதமாகும்,

ஏன் இவர் டில்லிக்கு அடிக்கடி வருகிறார்? அங்கு என்ன வேலை இவருக்கு. ஒரு மாதத்திற்கு முன் வந்திருந்தார், பதினைந்து தினங்கட்கு முன் வந்திருந்தார். இனியும் வரப்போகிறார். இவருக்கு அங்கு என்ன வேலை.

மந்திரி மாணிக்கவேலர் பத்து தினங்களுக்கு முன் வந்தார், 20 தினங்கட்கு முன் மந்திரி வெங்கட்ராமன் வந்தார், முதன் மந்திரி காமராசரும் இடை, இடையே வருகிறார் ஏன்? எதற்காக வருகிறார்கள்.

வெள்ளிக்கிழமைகளில் சனீஸ்வரன் கோவிலை சுற்றுவது போன்று இவர்கள் டில்லிக்கு வந்து அங்குள்ள அமைச்சர்களைச் சுற்றுகிறார்கள்.

இவர்கள் டில்லிக்கு பத்து முறை வந்தால் ஒருமுறை நேருவைப் பார்க்கிறார்கள்.

விவசாய அமைச்சரைப் பார்க்கிறார்கள். சமுதாய அமைச்சர் ஜேயைப் பார்க்கிறார்கள், நிதியமைச்சரையும், தொழிலமைச்சரையும் பார்க்கிறார்கள், உருக்குத் தொழில் அமைச்சர் சொர்ண்சிங்கையும் பார்க்கிறார்கள். இலாக்கா அதிகாரிகளையும், இலாக்கா செக்ரட்டரிகளையும் பார்க்கிறார்கள். ஏன் பார்க்கிறார்கள் சௌக்கியம் விசாரிக்கவா? இல்லை! தாங்கள் போட்ட விண்ணப்பங்களுக்குப் பரிகாரம் தேட, ஏதாவது சந்தர்ப்பத்தில் தங்கள் விண்ணப்பங்களுக்குக் கன்னத்தில் அறைவது போன்று பதில் வந்திருந்தால் மண்டியிட்டுக் கேட்க—தயவு செய்யுங்கள் என்று கெஞ்சுவதற்காக இதற்காகத் தான் டில்லிக்கு வருகிறார்கள்.

இந்த மாதிரி மானங்கெட்டு, சுயமரியாதையை இழந்து இருப்பதற்காகத்தான் எட்டுப்பேரை மந்திரிகளாக வைத்திருக்கிறோமா. நம் பிரதிநிதிகள் என்று எப்படி இவர்களைச் சொல்வது.

நமக்குத் தேவைப்படுவதற்கு நமக்குக் கிடைக்க வேண்டியதற்கு இனம் தெரியாதவன் எவனோ ஒருவன் கையெழுத்துப் போடுவது, அதற்காக நம் பிரதிநிதிகள் என்பவர்கள் தொங்கிக் கொண்டிருப்பதா?

இதைத் தெரிந்து கொள்வதற்கு இலக்கணம் பார்க்க வேண்டியதில்லை,

பொருந்துமா? நிலைக்குமா என்று பார்க்க வேண்டாம்.

இந்த மானங்கெட்ட நிலையை எத்தனை நாட்களுக்கு பொறுப்பது? எத்தனை நாட்களுக்கு சகிப்பது?

இந்த இழி நிலையைப் பாராளுமன்றத்து தென்னகத்து உறுப்பினர்களே உணர்ந்து விட்டார்கள் அவர்களே போராடும் நிலை ஏற்பட்டுவிட்டது.

காங்கிரஸ் உறுப்பினரான, முனுசாமியும், கே.டி.கே. தங்கமணி ஆகியவர்கள் நான் பேசுவதை ஆதரித்துப் பேசுகிறார்கள்.

பாலாறு விஷயமாக டில்லியில் ஒரு மாநாடு கூடியது. இந்த மாநாட்டிற்கு தமிழ் நாட்டுப் பாராளு மன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள் இதற்கு நமது மாநில அமைச்சர்களான கக்கனும், ராமய்யாவும் வந்திருந்தார்கள்.

பிரச்சினையை விரிவாகவிவரிக்கப்பட்டது. பலரும் பேசினார்கள் டில்லியில் உள்ள அதிகாரிகள் இதற்கு ஒன்றும் செய்வதற்கில்லை யென்றும் சம்மந்தப்பட்ட மாநிலத்திலுள்ள அதிகாரிகளுடன் கலக்க வேண்டுமென்றும் கூறிவிட்டார்கள். நான் உடனே கேட்டேன் ஏன் டில்லி, மைசூர், சென்னை அதிகாரிகளை அழைத்துப் பேசக்கூடாது. அப்படிச் செய்து பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னேன்.

அதற்கு அதிகாரிகள் சரி அவ்விதம் செய்கிறோம், என வாக்களித்தார்கள்.

மாநாடு முடிந்ததும் மந்திரி கக்கன் என்னிடம் பேசும்போது ஏழு மாதத்திற்குமுன்பே இதை நாங்கள் கூறியிருக்கிறோம் என்று சொன்னார்,

இதுபற்றி நான் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டேன். அதற்கு எனக்குக் கொடுத்த பதிலில் பாலாறு விஷயமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென்று தெரிவித்து விட்டோம் என்று கூறினார்கள். இது விஷயமாக துடி, துடித்துக் கொண்டிருந்த அமைச்சர்கள் என்ன செய்தார்கள்.

டில்லியிலுள்ள உணவு மண்டலத்திலிருந்து பிரிந்து தனி உணவு மண்டலமாக வேண்டுமென்று நமது மாநில அமைச்சர் பக்தவச்சலம் துடியாய் துடித்தார் மாறி மாறி டில்லிக்கு வந்தார். அறிக்கை மேல் அறிக்கை விட்டார். பார்க்காதவர்களையெல்லாம் பார்த்தார். நமது மாநில முதலமைச்சர் காமராசர் தனியாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்.

நிதியமைச்சர் சி. சுப்பிரமணியமும் தனி உணவு மண்டலமாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். இந்த நிலையைப் பார்த்ததும் எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

நமது மாநில அமைச்சர்கள் இயற்கையான உணர்ச்சியோடு வாதாடுகிறார்கள் என்று உணர்ந்தோம், பாராளு மன்றத்தில் கேள்வி கேட்க வேண்டுமென்று நினைத்தோம்!

மத்திய உணவு மந்திரி திரு. எஸ். கே. பட்டிலிடம் நான் கேள்வி கேட்டேன். "சென்னை மாநிலம் மத்திய உணவு மண்டலத்திலிருந்து பிரிந்து போக கேட்பது பற்றி, என்ன சொல்கிறீர்கள்" என்று நான் கேட்டேன்!

அதற்கு மத்திய உணவு மந்திரி எனக்குப் பதிலளிக்கும் முறையில் கூறினார், "நாங்கள் அவர்களை எங்களோடு இருக்கும்படி வற்புறுத்தவில்லை, தனியாக இருக்க வேண்டுமென்று நினைத்தால் அவர்கள் தனியாக இருக்கலாம் சென்னை மாநில அமைச்சர்கள் இது பற்றி எங்களுக்கு ஒன்றும் எழுதவில்லை" என்று மந்திரி எஸ். கே. பட்டில் கூறினார், இது நமக்கு வெற்றி யென்றே நான் நினைத்தேன்!

கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் திரு.கே.டி.கே. தங்கமணியும் என்னை ஆதரித்துப்பேசினார். நமது மாநிலஅமைச்சர்கள் ஏதாவது அறிக்கை விடுவார்கள் என்று நினைத்தேன், ஒருவரும் விடவில்லை! எங்களுக்கு இது மிக அவமானமாகி விட்டது.

எங்களுக்கும் உணர்ச்சி இருக்கிறது என்பதை மெய்பிக்க ஒன்றும் கூறவில்லை.

சட்ட மன்றத்தில் எதற்கும் பள்ளிக் கூட உபாத்தியாயர் போல் உறுப்பினர்களிடம் நடந்து கொள்ளும் நிதியமைச்சர் சுப்பிரமணியமாவது ஏதாவது பேசுவார் என்று நினைத்தேன், அவர் ஒன்றும் பதிலளிக்கவில்லை!

எங்களை அங்கே சந்தியில் இழுத்து விட்டு வாளாக இருந்து விட்டார்கள்,

தமிழ் நாட்டில் மைல்கற்களில் இந்தியில் எழுதி வருகிறார்கள், இதுபற்றி இந்த மாநில அமைச்சர்களின் அபிப்பிராயம் கேட்கவே இல்லை, இவர்களை அவர்கள் மதிக்கவில்லை! திராவிட முன்னேற்றக் கழகம் இதை பலமாக ஆட்சேபித்து வந்தது.

மத்திய உள்நாட்டமைச்சர் கோவிந்த வல்லப பந்திடம் இது பற்றி கேள்விகள் கேட்கப்பட்டது. "தமிழ் நாட்டில் மைல் கற்களில் இந்தியில் எழுதப்படுகிறதே அந்த மாநில அமைச்சர்களிடம் கேட்கப்பட்டதா" என்று.

அதற்கு அமைச்சர்பந்த் அதற்குப் பதிலளித்தார். "சென்னை சர்க்கார் மைல் கற்களில் இந்தியில எழுதுவதை ஆட்சேபிக்கவில்லை!" என்று

நமது அண்ணா அவர்களையும், என்னையும் எதற்கெடுத்தாலும்

(9-ம் பக்கம் பார்க்க)

சேனநாயகா ! சேனநாயகா !

சிறிதும் பலமில்லாத, ஒருமாத காலத்திற்கு முன்பு பதவி ஏற்றுக் கொண்ட சேனநாயகாவின் சர்க்கார் இன்று தோற்கடிக்கப்பட்டது! இதன் விளைவாக இலங்கையில் மீண்டும் பொதுத்தேர்தல் நடைபெற இருக்கிறது! அடுத்தப் பொதுத் தேர்தலிலாவது நிலையான சர்க்கார் ஏற்படுமா? அதுவும் சந்தேகம் தான்!

சேனநாயகா தன் கட்சி உறுப்பினர்களை மட்டும் நம்பி பதவி ஏற்றுக் கொண்டது, அவருடைய மனோ தைரியத்தை நன்கு எடுத்துக் காட்டுகிறது! என்றாலும் குருட்டு தைரியம் பயன் தருமா?

சேனநாயகா தனக்குள்ள வெறிகளையெல்லாம் ஒழித்துவிட்டு தமிழரசுக் கழக நண்பர்களையும் தன்னோடு சேர்த்துக் கொண்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காது! தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்த்திருந்தால் இலங்கையில் இது போன்ற நெருக்கடிகளுக்கு வழியே உண்டாயிருக்காது!

போனது போகட்டும்! அடுத்தாவது ஒரு நிலையான சர்க்காரை ஏற்படுத்த வழி செய்யுங்கள்! அதற்கு அங்குள்ள தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதே வழியாகும்!

எங்களை ஒழித்துக் கட்ட சதியா?

லட்சியம் நிறைவேற உயிர் விடவும் தயார்!

நாங்கள் ரௌடிகளாம்—போக்கிரிகளாம்!

அண்ணாவின் அறவழி நின்று போராட வாரீர்!

பொது மக்களுக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். வேண்டுகோள்!

சென்னை 59–வது வட்டம் ஆல் தோட்டம் கலை வளர்ச்சி மன்ற ஐந்தாவதாண்டு விழாவும், அந்த வட்டத்து நகராண்மைக் கழக உறுப்பினருமான டி. என். கிருஷ்ணனைப் பாராட்டுவதற்கும் ஆல் தோட்டத்தில் 24–4–60-ம் தேதி மாலை ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திரு. எஸ். துரை தலைமை வகித்தார். பின் தோழர்கள் கஜபதி, ராமன் முதலியவர்கள் கலை வளர்ச்சி மன்றத்தின் சேவையைப் பற்றியும், திரு. டி. என். கிருஷ்ணன் இந்த வட்டத்திற்கு செய்த பணிகளைப் பற்றியும், முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களைப் பற்றியும், அதை மாற்றார் தாக்குவதைப் பற்றியும் மிக. விரிவாகவும், விளக்கமாகவும் பேசினார்கள்.

சென்னை சட்ட மன்ற உறுப்பினரும், முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவருமான திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் சட்ட மன்றத்தில் சாதித்தவைகளைப் பற்றியும், நாட்டில் நடைபெற்று வரும் நிலைமைகளைப்பற்றியும் விளக்கமாகப் பேசினார்

வட்டத்து நகர மன்ற உறுப்பினருக்கு பாராட்டிதழ் வாசித்தளிக்கப்பட்டது இலட்சிய நடிகருக்கும், புரட்சு நடிகருக்கும், தோழர், கோவிந்தசாமிக்கும் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணுவிக்கப்பட்டது

வட்டத்து நகர மன்ற உறுப்பினர் தோழர். டி. என். கிருஷ்ணன் நகர மன்றத்தில் தாம் சாதித்தவைகளைப்பற்றி பேசினார்

இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் முன்னேறக் கழகத்தின் கொள்கைகளைப்பற்றியும் மாற்றாரின் எதிர்ப்புகளைப்பற்றியும் பேசினார்

புரட்சி நடிகர் எம்.ஜி. ராமசந்திரன் அவர்கள் பேசியதாவது:

அன்புள்ள தலைவர் அவர்களே, நண்பர்களே ⁄ பெரியோர்களே அருமைத் தாய்மார்களே

இன்று இங்கு கலைவளர்ச்சி மன்றத்தின் ஆண்டுவிழாவும், நமது நண்பர் இந்த வட்டத்தின் நகர மன்ற உறுப்பினர் தோழர் டிஎ.ன். கிருஷ்ணனைப் பாராட்டும் கூட்டமும் நடைபெறுகிறது

இன்று இங்கு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தும், மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணுவித்து பெருமை படுத்தியதற்காக நன்றி செலுத்துகிறேன்

நண்பர் டி. என். கிருஷ்ணன் ஓராண்டுக்கு முன் நகரமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்று அவரைப் பாராட்டுகிறீர்கள் இது மிகவும் பொறுத்தமானது.

நீங்கள் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் நல்ல பணிகளைச் செய்கிறாரா? அவர் தகுதியுடையவர் தானா? என்று பார்த்து, அவர் செய்த பணிகளை நன்கு ஆராய்ந்துபாராட்டுகிறீர்கள் இதுதான் சிறந்தது. தோழர் டி. என். கிருஷ்ணனை நீங்கள் பாராட்டுகிறீர்கள். ஆனால் எனது தம்பி இலட்சியநடிகர் கூறியது போன்று கிருஷ்ணன் எங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர். அவரை நாங்கள் பாராட்டினால் அது எங்களை நாங்களே பாராட்டிக் கொள்வதாகும்.

இங்கு கூட்டம் நடத்தியவர்கள் கூட்டச் செலவிற்காக உண்டியலை வசூலித்தார்கள். அப்படி வசூலாகும் பணத்தை வைத்து சரி கட்ட வேண்டுமென்றார்கள்.

நான் இங்கு கூடியுள்ள உங்களுக்கெல்லாம் ஒரு யோசனை கூறுகிறேன். அதை நீங்கள் ஏற்றுக் இன்றிலிருந்து உறுதிப் படுத்திக் கொண்டால் கூட்டம் நடத்துபவர்களுக்குக் கஷ்டம் ஏற்படாது.

எனக்கும், தம்பி ராஜேந்திரனுக்கும், மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அன்பளிப்பாகப் போட்டீர்கள்!

மாலையும், கைத்தறி ஆடையும் போடுவதால் மட்டும் அன்பு வளராது. உங்களுடைய உணர்ச்சியாலும், கட்டுப் பாட்டாலும், ஆர்வத்தாலுமே அன்பு வளரும் ஆகவே எங்களுக்காக—நமது தலைவர்களுக்காக மாலைக்காக—ஆடைக்காகச் செலவாகும் பணத்தை கூட்டம் நடத்துபவர்களுக்குக் கொடுங்கள்-

“இந்த மன்றத்தார் மாலைக்காக வசூலித்த பணத்தை கூட்டச் செலவிற்கு எட்டணா கொடுக்கிறோம்,”

“இன்னக் கழகத்தார் ஒரு ரூபாய்” கொடுக்கிறோம். என்று கொடுங்கள். இது மிக நலமாக இருக்கும். தாய்மார்களும், நண்பர்களும் இதைச் செய்கையில் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வட்டத்து உறுப்பினருக்குப் பாராட்டு என்று கூறினார்கள். நண்பர் கிருஷ்ணன் தான் செய்த பணிகளைப் பற்றி ஒரு பட்டியல் தந்தார்.

அதிலிருந்தே திராவிட முன்னேற்றக் கழகத்தார் மக்களுடைய துன்பத்தை நீக்க எந்த வகையில் பணியாற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இன்று நாட்டில் மக்கள் தாங்க முடியாதத் துன்பத்தில் உழன்று வாடுகிறார்கள். அதைப் போக்க நாம் முற்பட வேண்டும்.

பொது மேடைகளில் எப்படிப் பேசுவது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வார்த்தைகள் உச்சரிப்பதை மிகக் கவனத்துடன் உச்சரிக்க வேண்டும் பொறுப்புடனும், பொறுமையுடனும் பேச வேண்டும்

நமது இலட்சிய நடிகர் பேசும் போது குறிப்பிட்டார்.

மேடைகளில் கீழ்த்தரமாகப் பேசுவதாக பேசுபவர்கள் பேசட்டும் நமக்கு நமது இலட்சியமே முக்கியம் அதை நிறைவேற்றப் பாடுபடுவோம்.

நமது அருமை அண்ணா அவர்கள் நமக்குக் கொடுத்திருப்பது கடமை, கண்ணியம், கட்டுபாடு இவைகளிலிருந்து சிறிதும் நழுவக் கூடாது. நாம் மட்டும் ஒற்றுமையோடு பணியாற்றி வந்தால் எவரும் நம்மை ஒன்றும் செய்து விட முடியாது.

தோழர் டி. என். கிருஷ்ணன் பேசும் போது கூறினார்.

நான் இப்போது எனது தொழிலுக்குப் போவதில்லை. பொதுப் பணி செய்யும்படி நமது இலட்சிய நடிகர் கட்டளையிட்டுவிட்டார். என்று.

இலட்சிய நடிகர் கூறினார். ‘நான் பொதுப் பணி செய்யும்படி கட்டளை யிட்டதாக கிருஷ்ணன் கூறினார். ஒருவர் கட்டளையிட்டுப் பொதுப் பணி செய்ய முடியாது. அது இயற்கையாக வர வேண்டுமென்று”

நமது கிருஷ்ணனுக்கு இயற்கையாகவே பொதுப் பணியில் ஆர்வமுண்டு. அவர் சிறுவயதிலிருந்தே பொதுப் பணி புரிந்து வருகிறார். அவருக்கு ஒருவர் கட்டளையிட வேண்டியதில்லை.

நமது இலட்சிய நடிகர் ஒன்றை மறைத்துப் பேசிவிட்டார் நமது, டி. என். கிருஷ்ணனை பொதுப் பணி செய்யும்படி மட்டும் கட்டளையிடவில்லை. மாதா மாதம் சம்பளம் கொடுத்து வாழ்க்கைக்கு வசதி ஏற்படுத்தி விட்டார்.

ஏன் அப்படிச் செய்தார். பொது வாழ்விலிருப்பவர்கள் வாழ்க்கையில் துன்பப்பட்டால் அவர்கள் ஏற்றிருக்கும் பணியைச் சரிவர செய்ய முடியாது. அது மாத்திரமன்றி தப்பான வழியில் போக நேரிடும் என்று தான் அப்படிச் செய்தார் இது தான் முன்னேற்றக் கழகத்தாரின் பண்பு. நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மையோ என்னவோ, சிலர் பொதுப் பணி செய்பவர்கள் பொது மக்களிடம் பணம் வாங்குவதாக்வும், அதாவது லஞ்சம் பெறுவதாவும் கேள்விப்படுகிறேன்!

அந்த மாதிரியான நிலை ஏற்படக்கூடாதென்றே நமது ராஜேந்திரன் கிருஷ்ணனுக்குப் பணம் கொடுத்து, “மக்கள் பணி செய். உனக்கு வாக்களித்தவர்களின் நலனுக்காகக் பாடுபடு முழு நேரமும் அதில் ஈடுபடு” என்று சொல்லி சம்பளம் கொடுத்து வருகிறார்.

நமது கழகம் ஒழுக்கத்தையும் லட்சிய உறுதியையும் கடைபபிடிக்க வேண்டுமென்று கருதும் ஒரு இயக்கமாகும். ஆகவே, அந்த இயக்கத்திலுள்ளவர்கள் அதிலிருந்து தவற மாட்டார்கள்.

நமது நண்பர் டி. என். கிருஷ்ணனுக்குப் பாராட்டு என்று கூறினார்கள். நான் கூறுவேன். இது கிருஷ்ணனைப் பாராட்டுவதல்ல கிருஷ்ணனுக்கு வாக்களித்த மக்களைப் பாராட்டவே இங்கு கூடியிருக்கிறோம்.

மக்களுக்குப் பாராட்டு என்றால் யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

அதனால் தான் கிருஷ்ணனுக்குப் பாராட்டு என்று கூறுகிறோம்! என்னைப் பொறுத்த வரை பொது மக்களாகிய உங்களைத் தான் நான் பாராட்டுவேன்—ஏன்?

உங்கள் வட்டத்துக்கு ஒரு நல்லவரை, ஒரு தொண்டரை கொள்கைக்காக உயிரை விடும் உண்மை ஊழியரை தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்! ஆகவே தோழர் கிருஷ்ணனைத் தேர்ந்தெடுத்த உங்களை வரையும். சிறப்பாகத் தாய்மார்களையும் பாராட்டுகிறேன்!

எனது தம்பி ராஜேந்திரன் பேசும் போது துடி. துடிப்பாகவும், ஆத்திரமாகவும் பேசினார்.

மாற்றுக் கட்சியினர் தங்கள் கூட்டங்களில் மிகவும் இழிவாகவும், ஆபாசமாகவும் பேசி வருவதாகவும், எங்களைத் தீர்த்துக் கட்டுவதாகவும் பேசியதாகக் கூறினார்-

இன்று முன்னேற்றக் கழகத்திலிருக்கும் கலைஞர்கள் மீது தான் மாற்றார் ஆத்திரப்படுகிறார்கள்!

காங்கிரஸ் மேடையில் என்னைப் போக்கிரி என்றும், தம்பி ராஜேந்திரனை ரௌடி என்றும் பேசியதாகவும் “இந்த போக்கிரியும், ரௌடியும் துள்ளிக் கொண்டிருக்கிறார்கள் அவர்களை ஒழித்துக் கட்டுவோம்” என்று பேசினார்களாம். பேசட்டுமே அவர்கள் பேசியதைப் பத்தி என் கவலைப் படப் போவதில்லை. நானும், தம்பி

(8-ம் பக்கம் பார்க்க)

ஒரு பொய்யை பல முறை கூறினால், அது மெய்யாகிவிடும்!

அப்படிக்கூறி கழகத்தை அழிக்கப் பார்க்கிறார்கள்!

(எம். ஜி. ஆர். பேச்சு)
(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜேந்திரனோ மற்ற கலைஞர்களோ ஒழிக்கப்பட்டாலும் சிறைக்கனுப்பப்பட்டாலும் — கவலையில்லை, எங்களுக்குப் பின் பல கலைஞர்கள் வருவார்கள். ஆனால் நமது கழகத்துக்கு, நமது லட்சியத்திற்கு இழுக்கோ, பங்கமோ நேரிடக் கூடாது.

"இந்த ராமச்சந்திரன் கொள்கைக்காக தூக்கு மேடையேறவோ, சிறைவதைபடவோ தயங்க மாட்டான், அதே போல்தான் இலட்சிய நடிகரும்"

காங்கிரஸ்காரர்கள் 1962-ம் வருடம் வரும் பொதுத் தேர்தலுக்குள் நமது கழகத்தையும், நமது தோழர்களையும் ஒழித்து அழித்து விட பல சதித் திட்டங்கள் வகுத்தாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

"எம். ஜி ராமச்சந்திரனும் ராஜேந்திரனும் ஒரு தோட்டத்தில் கூடினார்கள், அல்லது ஒரு பங்களாவில் கூடினார்கள். குடித்திருந்தார்கள், கொலை செய்யத் திட்டமிட்டார்கள், அவர்கள் மீது கிரிமினல் குற்றப்படி கைது செய்யப்பட்டிருக்கிறது" என்ற செய்தி வந்தாலும் நீங்கள் ஆச்சரியப்பட வேண்டியதில்லை! இன்று அந்த நிலைக்கு வந்திருக்கிறது மாற்றார் நிலை, இப்படிச் செய்வதால் எங்களை அவமானப் படுத்தவோ, அல்ல, இப்படிச் செய்தால் கழகத்திற்குக் கெட்ட பெயர் உண்டாகும், கழகத்திற்குக் மக்கள் அன்பு குறையும் என்பதற்கே செய்வார்கள்.

இன்று கழகம் வளர்ந்து வருகிறது. மக்கள் அதற்கு ஆதரவு தருகிறார்கள், அங்கு கலைஞர்கள் மதிக்கப்படுகிறார்கள், மக்கள் அன்பைப் பெற்றிருக்கிறார்கள். அதற்கு இழுக்கு உண்டாக்க வேண்டுமென்றே திட்டமிட்டு பல காரியங்கள் செய்கிறார்கள்!

அதற்கடையாளமாகத் தான் இன்று எங்களை ரௌடிகளென்றும், போக்கிரிகளென்றும் கூறி வருகிறார்கள். இதைப் படிப் படியாகச் கூறி வந்தால், மக்களின் மனம் மாறு மென்று நினைக்கிறார்கள். ஒரு பொய்யை பல முறை கூறி வந்தால் அது மெய்யாகி விடும் இதை ஹிட்லரின் வரலாற்றிலிருந்தே தெரிந்து கொள்ளலாம், இப்படி இவர்கள் கூறும் பொய்களை புரட்டுகளை மக்களிடம் பேசி வந்தால், மக்கள் மனம் மாறும் அப்போது மக்கள் நினைப்பார்கள் "என்ன புரட்சி நடிகராம், லட்சிய நடிகராம் இவர்களைப் பற்றிப் பிரமாதமாகப் பேசினார்கள். இவர்கள் பள்ளிக்கூடம் வைத்தார்களாம், ஆஸ்பத்திரி திறந்தார்களாம், பெரிய பெரிய தர்மங்கள் செய்தார்களாம், கொடை வள்ளல் என்றார்கள்! கட்சியில் பெரிய வீரர்கள் என்றார்கள். இவர்கள் செய்திருக்கும் காரியத்தைப் பார்த்தால் மோசமானவராக இருக்கிறதே, இந்தக் கட்சியில் இருப்பவர்களும், இந்தக் கட்சியும் இப்படித் தான் போலும் இவர்களை நம்பக் கூடாது, தேர்தலில் இவர்களை ஆதரிக்கக் கூடாது" என்று மக்கள் நினைத்தால், அவர்கள் மனம் மாறினால் நமக்கு ஓட்டுக் கிடைக்காது நமது கட்சி தோற்கும்! இதற்காகத் தான் இப்படிப் பேசுகிறார்கள்.

இதனால் எனக்கோ, தம்பி ராஜேந்திரனுக்கோ தூக்கு மேடை வந்தாலும் எப்படிப் பட்ட இன்னல்கள் ஏற்பட்டாலும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நீங்கள் அதற்குக் கவலைப் படவேண்டாம்.

ஆகவே நீங்களெல்லாம் நமது இலட்சியத்திற்கு, நமது கொள்கைக்கு, நமது சமூகத்திற்கு இழுக்கு வரும்படியான எந்தக் காரியத்திலும் ஈடுபடக் கூடாது. நமது அண்ணா அவர்களின் அறவழிக்கு, அவர் கூறும் சாத்வீகத் தன்மைக்கு கேடு தரும்படி நடந்து கொள்ளக் கூடாது! மாற்றார்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்.

அடுத்த தேர்தலில் நாம் வெற்றிப் பெற்றால் அவர்களுக்கு பாதகம் என்று எண்ணியே தாக்குகிறார்கள்!

தேர்தலில் நாம் வெற்றி பெற்றால் இவர்கள் செய்த ஊழல்கள் வெளிப்படும் மக்கள் உண்மை நிலையை உணர்வார்கள் அதன் மூலம் திராவிட நாடு பெற வழி ஏற்படும் என்ற அச்சத்தாலேயே இப்படித் தாக்குகிறார்கள்.

அரசியலைப் புரியாதவர்களை, எங்கெங்கிருந்தோ அழைத்து வந்து மேடைகளில் ஏற்றி, அவர்களுக்குப் பணம் கொடுத்துத் தாக்கச் செய்கிறார்கள். இதனால் எல்லாம் நமது லட்சியத்தைப் பரவாமல் தடுக்க முடியாது.

நமது மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசும் போது கடந்த சட்ட மன்ற தேர்தலில் நான் பல கூட்டங்களில் பேசினேன் என்றும் அதனால் தான் அவர் வெற்றி பெற்றாரென்றும், நான் மிகவும் கடுமையாக உழைத்ததாகவும் கூறினார். நான் போய் பேசி அவர் வெற்றி பெற்றார் என்பது சரியல்ல. அவருக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. இவர் வெற்றி பெற வேண்டுமென்று பல காங்கிரஸ்காரர்கள் வேலை செய்தார்கள். அந்தக் காங்கிரஸ்காரர்கள் எனக்கும் மாலை போட்டார்கள். நான் அவர்களுக்காக பத்து பதினைந்து கூட்டங்களில் பேசினேன். அவரும் வெற்றி பெற்றார், சட்ட மன்றத்தில் நமது லட்சியங்களை முழக்குகிறார்.

சென்ற நகர மன்ற தேர்தலில் நாம் வெற்றி பெற்றோம்! நமது சமூகம் அங்கு நல்ல பணி செய்கிறது. இன்று மக்களுக்கு நமது சமூகத்தின் மீது பற்று ஏற்பட்டு வருகிறது.

அதே போன்று தான் நாம் வரும் தேர்தலில் வெற்றி பெறப் பாடுபட வேண்டும். நமது லட்சியங்கள் வெற்றி பெற்று நம்நாடு, நம் மக்கள் நல்ல நிலை பெற வேண்டும்.

அதற்காக நானோ, லட்சிய நடிகரோ, மற்ற கலைஞர்களோ எந்தவித கஷ்ட, நஷ்டங்களை அனுபவிக்கத் தயார்.

நமது லட்சியம் வெற்றி பெற எங்கள் உயிரையும் துறக்க நேரிட்டால் அதற்கும் நாங்கள் தயாராக இருப்போம்!

எனக்கு முன் பேசிய திரு. ஏ. கோவிந்தசாமி வடக்கே பிச்சைக்காரர்கள் இல்லை. அப்படி ஒன்றிரண்டு பேர் இருந்தாலும் அவர்கள் தென்னாட்டுக்காரர்களாகத் தான் இருப்பார்கள் என்று சொன்னார். இதை நன்கு நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்! ஏன் இந்த நிலை ஏற்பட்டது! இதை மாற்றி வழி வகை என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதைத் தான் நமது கழகம் வற்புறுத்தி வருகிற[illegible]

நானும், ல[illegible]சிய நடிகர் ராஜேந்திரனும் [illegible] காள்[illegible]கைப் பற்றி பிரசாரம் செய்[illegible]றோம், கொள்கைகளை ம[illegible]ளிடம் பரப்பி வருகிறோம் [illegible]ன்பதற்காகத் தான் [illegible]ங்களை தூற்று கிறார்கள், எதிர்க்கிறார்கள்

இனி நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமியையும் கடுமையாகத் தாக்கிப் பேசுவார்கள். ஏனெனில் அவர் மேல் சபையில் நமது கொள்கைகளைப் பேசப் போகிறார்.

அதே போன்று நடிகர் வளையாபதி முத்துகிருஷ்ணனும் நம்மோடு இருக்கிறார்! அவரையும் தாக்குவார்கள் கலைஞர்களெல்லாம் இங்கிருக்கிறார்களென்று அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது!

நமது லட்சிய நடிகர் பேசும் போது குறிப்பிட்டார் காங்கிரஸ் கட்சியில கலைஞர்கள் இல்லாதது தால், சில கலைஞர்களின் பின்னால் சுற்றுகிறார்களென்று. காங்கிரசில் இன்று கலைஞர்கள் இல்லை. ஆனால் முன்பு அதில் கலைஞர்கள் இருந்திருக்கிறார்கள்.

மன்னார்குடி எம். ஜி. நடராஜ பிள்ளை என்ற சிறந்த நடிகரை இன்றிருப்பவர்கள் தெரிந்திருக்க முடியாது.

அவர் பிரபலமான காங்கிரஸ்காரர், அவர் பலமுறை சிறை சென்றிருக்கிறார். மன்னார் குடியில் அவர் பெயரால் தெருவும் இருக்கிறது. அவருடைய வரலாறு யாருக்கும் தெரியாது,

(7ம் பக்கம் பார்க்க)

அமைச்சர்கள் ஏன் அடிக்கடி டில்லி வருகிறார்கள்?

மண்டியிட்டு காரியம் சாதிக்கவே!

நமது மாநில அமைச்சர்கள் அடிக்கடி டில்லிக்கு வருகிறார்கள் ஏன்? நலம் விசாரிக்க அல்ல.

தாங்கள் போட்ட விண்ணப்பங்களுக்குப் பரிகாரம் தேட.

அங்கு வந்து அதிகாரிகளிடம் கெஞ்சுகிறார்கள் மண்டியிடுகிறார்கள்! இந்த மாதிரியான மானங்கெட்ட நிலையை உண்டாக்குவதற்காகவா இங்கு எட்டு மந்திரிகள் இருக்கிறார்கள், இந்த இழி நிலை போக்க நம் நாடு விடுதலை அடைய வேண்டும்! அதற்காகப் பணி புரிய வாரீர்!

ஈ. வெ. கி. சம்பத்

காங்கிரசார் தெருவுக்கு சிவாஜி பெயர் வைக்க மறுத்தார்கள்!

கழகமோ நடிப்பிசைப் புலவரை மேல் சபைக்கு அனுப்பியுள்ளது!

(எம். ஜி. ஆர். பேச்சு)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னையில் ஒரு தெருவின் பெயரை நண்பர் சிவாஜி கணேசன் பெயரால் வைக்க வேண்டுமென்று நகரசபை தீர்மானித்து அரசினருக்கு அனுப்பினார்கள். ஆனால் ஆட்சியாளர்கள் அதை மறுத்து விட்டார்கள் ஏன்?

இதற்குக் காரணம் என்ன ஒரு தெருவுக்கு ஒரு கலைஞன் பெயரை—நடிகன் பெயரை வைக்க விரும்பவில்லை. கலைஞர்களுக்கு எப்படி காங்கிரஸ் மீது பற்றிருக்கும்.

ஆனால் நமது கழகம் இன்று சென்னை மேல சபைக்கு நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமியை அனுப்பியிருக்கிறது. அதற்கென்ன காரணம் கலையின் மீது கழகத்திற்கிருக்கும் பற்று தான் காரணம்.

நமது நடிப்பிசைப் புலவர் இனி நாடு பூராவிலுமுள்ள தீங்குகளை—மக்களின் துயரங்களை எடுத்துப் பேசுவார் நாட்டின் நலிவுக்கான காரியங்களைப்பற்றி கேள்வி கேட்பார்.

மேல் சபையில் நடக்கும் விஷயங்களை இனி நாடகத்தில் சேர்த்து நடிப்பார்—படத்திலும் சேர்ப்பார், அதற்காகத் தான் வெற்றியைக் கண்டு சஞ்சலப் படுகிறார்கள்.

நாம் சிவாஜி கணேசனைத் தாக்கி வருவதாகக் கூறுகிறார்கள்' அது தவறு. நாம் ஏன் அவரைத் தாக்குகிறோம், நாம் நாட்டில் பரப்பி வரும் "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்ற திட்டத்தை எதிர்த்தார். நாம் கண்டித்தோம், அவருக்கு ஆதாரம் காட்டினோம். அவரும் நான் எதிர்க்கவில்லை என்று கூறினார். வாதம் முடிந்து விட்டது.

குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக் கொண்ட பின் அதை வாதிக்கக் கூடாது! அது போன்று அதை எதிர்க்கவில்லை என்று கூறிய பின் நாங்கள் அவரை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை!

இந்த நாடு விடுதலை அடைவதற்கு முன் இந்த நாட்டில் இரண்டு கட்சிகள் தான் இருந்தது, இந்த நாட்டை அடிமையாக்கி ஆண்டு கொண்டிருந்தவர்கள், இந்த விடுதலை அடைய வேண்டுமென்று பாடுபட்டவர்கள். அப்போது எல்லோரும் ஒற்றுமையாகப் பாடுபட்டவர்கள் ஆனால் இன்று அப்படியல்ல.

இந்த நாட்டை அடிமையாக்கிக் கொண்டிருப்பவர்கள் நாடு விடுதலை யடைய வேண்டுமென்று பாடுபடுகிறவர்கள், நாடு விடுதலையாகக் கூடாதென்று கூறிக் கொண்டு, அடிமைப் படுத்துவோருக்கு உறுதுணையாக இருப்பவர்கள்.

அன்று அந்நியன் ஆட்சி நீங்க வேண்டும், நாடு விடுதலையாக வேண்டும் என்பதில் ஒன்றுபட்டுப் பணியாற்றினோம்!

இன்று நமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் எதிர்த்து சண்டை போட்டுக் கொள்கிறோம்! நாம் ஒற்றுமையோடு இருந்து அடிமைப் பட்டிருக்கும் நம் நாட்டை விடுதலை அடையச் செய்ய வேண்டும்.

1962-ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றால் திராவிட நாடு கிடைக்குமா என்று கேட்கிறார்கள். நீங்கள் வரும் பொதுத் தேர்தலில் சட்டமன்றத்திற்கு நம்மவர்கள் அதிகமாகச் செல்லும் படி செய்தால், அதன் காரணமாக நமது அண்ணா அவர்கள் மந்திரி சபை அமைத்தால் நாம் எளிதாக நமது நாட்டைப் பெறலாம்.

நமது கழகத்தின் வெற்றியைக் காட்டி, நமது மக்கள் அடைந்துள்ள விழிப்புணர்ச்சியைக் காட்டி நமது அண்ணா அவர்கள் டில்லியிடம் வாதாட முடியும்! அதற்கு நீங்கள் பாடுபட வேண்டும்!

இந்தத் தேர்தலில் நாம் எபபடியும் வெற்றியடையக் கூடாதென்றும். நமது லட்சியங்கள் நிறைவேறக் கூடாதென்றும் எண்ணி மிகவும் தீவிரமாகப் பாடுபடுகிறார்கள்! நீங்கள் வரும் தேர்தலில் அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்!

காங்கிரஸ்காரர்கள் இன்று ஸ்டுடியோ முதலாளிகளை தங்களுடன் சேர்க்கப்பார்க்கிறார்கள். நடிகர்களைச் சேர்க்கப் பார்க்கிறார்கள்! யார் யாரை எப்படி, எப்படி தங்களுடன் சேர்த்துக் கொள்வது என்பதற்காக பல திட்டங்கள் போட்டு வருகிறார்கள் நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், என்னையும் தம்பி ராஜேந்திரனையும் கூட சேர்க்க முயற்சி செய்யலாம் அது முடியாவிட்டால் எங்கள் மீது பழிவாங்க முற்படலாம் எங்களை தேர்தலின் போது வெளியில் இருக்க விடாது செய்யலாம் ஆகவே நீங்கள் இனிதான் மிகக்கட்டுப்பபாடாக இருக்கவேண்டும் நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் எந்தவித குழப்பமும், பலாத்காரமும் இன்றி சாத்வீக முறையில் பணியாற்ற வேண்டுமென்று எண்ணுகிறார் பலாத்காரத்தால் எதுவும் பலனளிக்காது என்று கருதுகிறார் அவர்கள் சொற்படி நடந்து நமது நாட்டை விடுதலையடையச் செய்யவேண்டும்

பம்பாய் மாகாணத்தில், மராட்டியர்களும், குஜாரத்திகளும் மொழி வழி மாகாணம் பிரிய வேண்டுமென்று முயற்சி செய்தார்கள அங்கு அடக்கு முறைகள் நடைபெற்றது பலாத்காரமான காரியங்கள் நடந்தது போலீசும் ராணுவமும் வந்தது தடியடிப் பிரயோகமும் துப்பாக்கிப் பிரயோகமும் நடைபெற்றது ரத்த ஆறு ஓடியது

அதனால் பல பிணங்கள் விழுந்தது இருமாநிலங்களாகப்பிரிந்தது

நாமும் நாடு பிரியவேண்டுமென்று சொல்லுகிறோம் நமது அண்ணா அவர்கள் பலாத்காரமற்ற முறையில் சாந்தமும் சாத்வீகமும்

(8-ம் பக்கம் பார்க்க)

தாக்கி பேசாது என்ன பேசுவார்கள்!

காங்கிரசின் சரித்திரமே தெரியாது அவர்களுக்கு

"மாற்றார்கள் மேடைகளில் இழிவாகத் தாக்கி வருகிறார்கள். தாக்குவதை விட அவர்களுக்கு வேறு என்ன பேசத் தெரியும், இன்று காங்கிரசிலிருப்பவர்களுக்கு தண்டியாத்திரை தெரியாது, பஞ்சாப் படுகொலை தெரியாது, தேசிய விடுதலைக்காக நடைபெற்ற எந்த போரையும் அறிந்திருக்க மாட்டார்கள். காங்கிரசைப் பற்றிய வரலாறும் தெரிந்திருக்க மாட்டார்கள்.

செக்கிழுத்த—கப்பலோட்டிய சிதம்பரனாரை அறிய மாட்டார்கள், கொடி காத்து மறைந்த வீரன் குமரனை அறிய மாட்டார்கள், தாதபாய் நௌரோஜியை அறியார்கள், லாலாலஜபதிராயைப் பற்றிய வரலாறு தெரியாது சென் குப்த்தாவைப் பற்றிப் புரிந்திருக்கமாட்டார்கள்.

கதருடை அணியச் செய்து மேடையில் ஏற்றினால் தாக்கிப் போசாது வேறு என்ன பேசுவார்கள்.

சமுதாயச் சில்லறைகள்

''பியெஸ்யி''

முறுக்கு, மசால்வடை, இயாப்பம் !

மனிதர்களில் சிலர், அரிசி உணவையும். கோதுமை உணவையும் பகிஷ்காரம் செய்துவிட்டு, முறுக்கு, மசால் வடை, இயாப்பத்தைத் (இது பட்டணத்து பாஷை) தின்றே காலத்தைக் கழிப்பதுண்டு!

அரிசி நான்கணு, எட்டணுவுக்குக் கிடைத்தாலும் இவர்கள் சோறு சாப்பிட மாட்டார்கள், அப்படி சாப்பிட்டாலும் வாந்தி தான் எடுப்பார்கள்?

காலணு மசால் வடையில், அரையணு முறுக்கில், ஒரு அணு இயாப்பத்தில் காணுகின்ற சுகத்தை வேறு எதிலுமே காண மாட்டார்கள்!

என்ன காரணத்தாலோ சிலரிடம் இந்த தொத்து வியாதி மண்டிக்கிடக்கின்றது!

''சரி தான், அதைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிருய்'' என்று சிலர் என்னைப் பார்த்துக் கேட்கக் கூடும்!

இந்த முறுக்கு, மசால் வடை புத்தி உணவு அளவோடு நின்ருல் நான் சிறிதும் கவலைப்பட மாட்டேன்! அரசியலிலும் இந்த புத்தி வளர்ந்து வருகிறதே என்பதை நினைத்து தான் பெரும் கவலை ஏற்படுகிறது!

முறுக்கு, மசால்வடை, இயாப்பத்தை நான், கேவலமாகவோ, மட்டமாகவோ கருதவில்லை! இவைகள் துணை ஆகாரமே தவிர, முழு ஆகாரத்திற்கு ஏற்றவைகள் அல்ல என்பதைத்தான் சுட்டிக் காட்டுகிறேன்!

அரசியலிலே எத்தனையோ முறுக்கு, மசால்வடை பேர் வழிகள் இருக்கின்றனர்!

சத்துள்ள நல்ல அரிசி உணவிருந்தும் அதைச் சாப்பிடுவதில்லை! முறுக்கு, மசால்வடை, இயாப்பம் தான் அவர்களுக்கு முழு ஆகாரமாக இருக்கின்றன!

சில, மேடை ப்பச்சாளர்கள் முறுகு, மசால்வடை, இயாப்பமாகி நம்மைத் திட்டியே வாழ்ந்து கொண்டு வருகின்றனர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கை குலைக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு இந்தப் பணியை செய்து வருகின்றுர்கள் !

சதாரண கொடியேந்திகள் மட்டும் இந்தத் திருப்பணியை செய்யவில்லை! பெரியார் இராமசாமி முதல் குத்தூசி குருசாமி வரையில்—தமிழ் நாட்டு ராஷ்டிரபதி இசையறிஞர் முதல் சாதாரண தொண்டன் வரை—முதலமைச்சர் கனம் காமராஜர் முதல் கக்கன் வரையில் இந்தப் பணியை தொடர்ந்து, நாள தவருமல் செய்து வருகின்றனர்!

அடுத்தத் தேர்தலில் தி.மு.க.வை ஒழித்துக்கட்ட எல்லோருமே ஒன்று சேர்ந்து பாடுபட்டு வருகின்றனர்!!

பெரியார் இராமசாமியும், முதல் அமைச்சர் கனம் காமராஜரும் காதல் திருமணம் புரிந்துக் கொண்டு நம்மை ஒழிக்கப் புறப்பட்டிருக்கிருர்கள்!

இசையறிஞர் ஓ. வி. அளகேசனே போட்டிப் போட்டுக் கொண்டு மேடைகளில் ரௌடித்தனம் செய்து வருகிருர்!

நிதி அமைச்சரைப் பற்றி விளக்கம் தேவையில்லை! அவருக்கு அறிஞர் பட்டத்தின் மீது அளவு கடந்த ஆசை !எனவே அடுக்கு மொழியில் பேசிப் பார்க்கிருர் ! பார்க்கட்டும் !

இந்தப் பெருந்தலைகளைப் பின் பற்றி சில தொண்டரடிப் பொடியாழ்வார்களும் முறுக்கு, மசால் வடை, இயாப்பத்தைத் தின்று ருசி பார்த்து வருகின்றுர்கள்!

சில அப்பாவி பொடியர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை திட்டினுல் தான் புகழ் கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டு மேடையிலே ஏறி சிலம்பம் விளையாடி வருகிருர்கள்!

திறமை சிறிதும் இல்லாத சில கைநாட்டுகள் இங்கே மேடையைத் தேடித் தேடி பார்த்து விட்டு, பெரியாரிடத்திலும், காமராஜர் கட்சியிலும் அடைக்கலம் புகுந்து, மேடையேறி நரி போல் ''கர்ஜனை''புரிபவர்களும் உண்டு! பெரிய கொள்கை வீரர்களைப் போல் பேசிக் கொண்டு ஊரை தினம், தினம் ஏமாற்றித் திரியும் இந்த எத்தர்களின் வாழ்வும் எப்போதும் நடைபெருது! இதை அந்தப் புதிய புரட்சி எரிமலைகள் புரிந்து கொள்ள வேண்டும்!

சிலர், நம்மை ''ஆத்திகர்கள்'' என்று குற்றம் சாட்டி ''நாத்திகம்'' சாயம் பூசிக் கொண்டு மலத்தை வாரி எறிபவர்களும் இருக்கத் தான் செய்கிருர்கள்!

நாகரீகம், பண்பு, அறிவு எல்லாம் வளர்ந்து விட்டதாகச் சொல்லப்படும் இந்த இருபதாம் நூற்ருண்டிலும் இப்படிச் சில்லறைகள் தோன்றிடக் காரணம் என்ன? நாகரீகம் வளர, வளர, அறிவு பெருக, பெருக மனிதர்களிடத்தில் சுயநலமும், பொச்செரிப்பும், பொருமையும் குடிகொள்ள ஆரம்பித்து விட்டன போலும் !

சமுதாயத்திலுள்ள சில்லறைகளிடம் அரசியலும், நாடும் சிக்கி மானுல் மக்களுடைய கதி தான் என்ன?

தமிழகத்து அரசியலில் முறுக்கு மசால் வடை பேர்கள் நிறம்பி வழியத் தொடங்கி விட்டனர்! இதைத் தடுத்து, சமுதாயச் சில்லறைகளை ஒழித்தாலன்றி நமக்கு விமோசனமே கிடையாது!

மக்கள், தங்கள் கையில் கையில் கிடைப்பவைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு அவர்களை நையப்புடைத்து விரட்டியடிக்க வேண்டும் !

ஒழிக ! மசால்வடை, முறுக்கு, இயாப்ப அரசியல் ஒழிக !

எம். ஜி. ஆர். பேச்சு

ஏழாம் பக்கம் தொடர்ச்சி

பொருந்திய முறையில் நம் நாடு பெற வேண்டுமென்று சொல்லுகிருர் அண்ணு அவர்கள் பலாத்காரத்தில் நம்பிக்கை யற்றவர் மக்களது உணர்ச்சியைக் கொண்டே ஒற்றுமையைக் கொண்டே நம் நாட்டை விடுதலை பெறச்செய்யலாம் என எண்ணுகிருர்

ஆகவே நாமெல்லாம் ஒற்றுமையோடும். கண்ணியத்தோடும், கட்டுப் பாடுடனும் இருந்து நமது அண்ணு அவர்களின் எண்ணத்தை நிறைவேறச் செய்ய வேண்டும்.

அடுத்து வரும் தேர்தலிற் நாம வெற்றி பெறுவதற்கான எல்லா காரியங்களையும் கழகக் கட்டளைக் கிணங்கச் செய்யவேண்டும்

காங்கிரசார் தேர்தலில் வெற்றிபெற இப்போதே பணியாற்றி வருகிருர்கள்

சில தினங்களுக்கு முன் திரு. ராஜகோபாலாச்சாரியாரை கடற்கரையில் கத்தியால் குத்தச் சென்றதாகச் செய்தி பார்த்தோம். பின் பத்திரிகையில் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர் என்ற செய்தியையும் பார்த்தோம். அது வந்த நான்கைந்து தினங்களுக்குப் பின் அவர் திராவிடர் கழகத்தைச் சார்ந்தவரல்ல என்ற செய்தியையும் பத்திரிகையில் கண்டோம்! ஆனுல் பொது மக்கள் தினம், தினம் பத்திரிகையை படிக்க முடியாது முதல் நாள் திராவிடக் கழகம் என்ற செய்தியைப் பார்த்தவர்கள் அதைத் தான் மனதில் பதிய வைத்துக் கொள்வார்கள் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவரல்ல என்ற செய்தி வந்த பத்திரிகை படிக்க வசதியற்றவர்கள் முதல் நாள் படித்ததைத் தான் எண்ணிக் கொள்ளவார்கள்.

ஆகவே யாராக இருந்தாலும் சரி. தாங்கள் சார்ந்துள்ள இயக்கத்திற்கு இழுக்கு நேரிடும் படி காரியங்கள் செய்யக் கூடாது!

திரு. ராஜகோபாலாச்சாரியார் அரசியலில் மாறுபாடுடையவரானுலும், வயதானவர், படித்தவர், அறிவாளி. அவர் எவ்விருந்தாலும், அவர் கொள்கை மாறுபட்டிருந்தாலும் தப்பான வழியைக் கையாண்டு தீங்கிழைக்கக் கூடாது.

நமது அறிஞர் அண்ணு அவர்கள் நமக்கு அதனுல் தான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மந்திரத்தைப் போதித்துள்ளார் அதை என்றும் மறவாதீர்கள்!

இன்று கூட்டத்தில் ஏராளமான தாய்மார்கள் வந்திருக்கிருர்கள் அவர்கள் முன்னுல் இருக்கிருர்கள் அவர்களுக்கு நாம் பாதுகாப்பளிக்கவேண்டும் முன்னுல் யாரும் வரக்கூடாது

இங்கு கூட்டம் போட அனுமதி கொடுக்கமறுத்ததாகக் கூறினர்கள் நமது கூட்டங்களுக்கு ஏராளமானவர்கள் கூடுகிருர்கள் இந்தமாதிரி குறுகலான இடத்தில் கூட்டங்கள் கூட்டி மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது வேறு விசாலமான இடங்களில் தான் கூட்டங்கள் நடத்த வேண்டும் கூட்டம் கலையும் போது மிகவும் அமைதியோடும் யாருக்கும் தொந்திரவு தராதவகையிலும் கலைய வேண்டும்

நீங்களெல்லாம் இவ்வளவு நேரம் கஷ்டப்பட்டு பொறுமையுடனிருந்து கூட்டத்தை அமைதியுடன் நடத்தித் தந்ததற்காக உங்களுக்கு வணக்கமும் நன்றியும் கூறி திராவிடம் வாழ்க என்று முடிக்கிறேன்.

வணக்கம்

அடுத்தவாரம்

சென்னை ஆல் தோட்டத்தில் இலட்சிய நடிகர் எஸ், எஸ். ராஜேந்திரன் திரு ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. பேசிய இலட்சிய முழக்கம் அடுத்த வாரம் வரும்

இவர்கள் டெல்லிக்கு வந்தால் மந்திரிகளை அடிக்கடி பார்ப்பதில்லை !

அதிகாரிகளைப் பார்த்துதான் கெஞ்சுகின்றனர் !

(சம்பத் பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சவால் விடுகின்ற இந்த மாநில அமைச்சர்கள். இதுபற்றி ஒன்றும் பேசவில்லை

எங்களைக் கேவலமாகவும், இழிவாகவும் கிண்டலாகவும் பேசும் நிதியமைச்சர் சுப்பிரமணியம் தங்களுடைய மானம் பறி போவதை, தங்கள் சுயமரியாதைக்கு இழுக்கு வருவதை கொஞ்சம் கூட எண்ணிப் பார்க்காமலிருக்கிறார்.

உன்னைக் கேட்காது உனது பிரதேசத்தில் எல்லாம் செய்கிறார்கள் உன் மரியாதைக்குப் பங்கம் விளைவிக்கிறார்கள் இந்தச் செயலைக் கண்டிக்கவோ, அவமானத்தைப் போக்க முயற்சிக்கவோ படவில்லை,

இந்த நிலையில் உன்னை மந்திரி என்று சொல்லிக் கொண்டிருக்கிறாய், ஆனால் அந்தப் பதவிக்கான மரியாதையை, மானத்தை உன்னால் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை, ஆகவே, நீ இருக்க வேண்டிய இடம் அதுவல்ல. நீ வெளியில் வந்துவிடு, காப்பாற்றும் திறமையுள்ளவர்கள் அங்கே போகட்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் எந்த விஷயத்தையும் எப்படி, எப்படி நியாயமான முறையில், நேர்மையான முறையில் கூற வேண்டுமோ அவ்விதம் கூறி வருகிறது.

சினிமா படங்களில் எந்தெந்த இடத்தில்பாட்டுகள் எப்படி, எப்படி இருக்க வேண்டுமோ அப்படி பாடுகிறார்கள் அந்தவிதம் நாங்களும் எந்தெந்த விஷயத்தை எப்படி எப்படி கூற வேண்டுமோ அப்படி கூறி வருகிறோம். மக்களுக்குச் சரியென்று படும் படியான முறையில் கூறி வருகிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகம் சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்றும், அது உடனடியாகத் தேவைப்படுகிறதென்றும் கூறிவருகிறது.

கழகம் 1948ல் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை கூறிவந்திருக்கிறோம்.

நமது முன்னேற்றக் கழகத்தின் தினசரியாக இருந்த 'மாலைமணியிலும், திராவிட நாடு" பத்திரிகையிலும் எழுதி வந்திருக்கிறோம். நாம் கூறி வந்ததை நமது மாற்றுக் கட்சிப் பத்திரிகைகளான தினமணி, சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கிறது,

நாம் சொல்லும் போது நம்மை நையாண்டியும், கேலியும் கிண்டலும் செய்தார்கள்! நாம் அதற்கல்லாம் கவலைப் படாது பொது மக்களிடம் எடுத்துக் கூறி வந்தோம்.

காரைக்குடி அழகப்பா கல்லூரியில் இஞ்சினியர் மாணவர்களிடையே பேசிய மாநில தொழிலமைச்சர் எம். வெங்கட்டராமன், "சேலத்தில் இரும்பு இருக்கிறதென்பது அரசியலில் மக்களை ஏமாற்றும் ஒரு காரியமாகும் அங்கு நல்ல இரும்பு கிடைக்காது! அது மட்டமான இரும்பு இது சாத்தியமில்லாத காரியம்! அங்கு இரும்பு இருக்கிறதென்று கூறுவது பைத்தியக்காரத்தனம்" என்று கூறியிருக்கிறார்! இதை நான் அங்கு போயிருக்கும் போது அங்குள்ள மாணவத் தோழர்கள் என்னிடம் கூறினார்கள். நான் அதுபற்றி கவலைப்படவில்லை

கடந்த 1943-ம் ஆண்டு நடைபெற்ற உலகப் போரில் ஜெர்மனியும் ஈடுபட்டிருந்தது! அதன் காரணமாக, அந்த நாடு குண்டுகளுக்கிரையாகி பாலைவனம் போன்று காட்சியளித்தது. அங்குள்ள மக்கள் மிகவும் அவதியுறும் நிலை ஏற்பட்டது! மக்கள் உணவின்றி மிகக் கஷ்டப்பட்டார்கள்! இங்கு நாம் கஞ்சித் தொட்டி வைத்து கஞ்சி ஊற்றுவது போன்று அங்கும் கஞ்சித் தொட்டிகள் வைத்து சூப்பு, கஞ்சி இவைகள் ஊற்றி வந்தார்கள்! இன்று, இடிந்த கட்டிடங்களை யெல்லாம் புதிப்பித்து பெரிய, பெரிய தொழிற்சாலைகளை நிறுவி, மற்ற நாட்டில் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான உதவிகளைச் செய்து இன்று உலகத்திலேயே தொழிற்துறையில் மேம்பாடடைந்து, மக்களெல்லாம் பழைய நிலைக்கு வந்து. இன்று நமகுக் கடன் கொடுத்துதவும் நிலைக்கு வந்து விட்டார்கள்!

எப்படி இந்த நிலை அடைய முடிந்தது! அங்குள்ள அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சி தான், அவர்கள் வளமுள்ள இடங்களில் எல்லாம் தொழில் சாலைகளை நிறுவி, நாட்டுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்தாகள்!

இங்கு நமது அமைச்சர்கள் இங்கு இரும்பு உற்பத்தித் தொழிற்சாலை நிறுவ முயற்சி செய்தோம் சாத்தியமில்லை என்று கூறுகிறார்கள்!

இவர்களால் என்ன செய்ய முடியும்! டில்லிக்கு விண்ணப்பம் போட்டு அனுமதி வாங்குவதைவிட!

நான் பாராளு மன்றத்தில் சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலையைப் பற்றி கேள்வி கேட்டேன்! என்னைப் பின்பற்றி நமது ஆச்சாரியாரின் புதல்வர் சி. ஆர். நரசிம்மன் இவர் காங்கிரஸ் உறுப்பினர். பேச ஆரம்பித்து நான் சம்பத் கூறியதை ஆதரிக்கிறேன்! அது மிகவும் அவசியம் அதை உடனடியாக ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கூறினார். அதே போன்று திரு. தானுப்பிள்ளையும் பேசினார்! நான் சொன்னதை வரவேற்றார்.

கடந்த சில தினங்களுககு முன் நமது சென்னை சட்ட மன்றத்தில் நான் பாராளுமன்றத்தில் இரும்புத் தொழிற்சாலை பற்றி பல ஆதாரங்களுடன் பேசியதை வைத்து கேலி செய்திருக்கிறார்கள்.

சென்னை சட்ட மன்றத்தில் இப்போது எதெதெற்கோ உரிமைப் பிரச்சினை கொண்டு வரப்படுகிறது! அப்படி இருக்கும் போது அந்த மனறத்தின் உரிமை பறி போகும் வண்ணம் பேசப் போவதில்லை!

நாட்டு மக்களின் உரிமையில் அக்கரையில்லாத ஆட்சியாளர்கள் மன்றத்தின் உரிமையில் அக்கரை காட்டுகிறார்கள்.

வேதாரண்யம் தொகுதியிலிருந்து உறுப்பினராக வந்துள்ள திரு. அ. வேதரத்தினம்பிள்ளை ஒரு கேள்வியை கேட்டிருக்கிறார்.

அவர் அந்தக் கேள்வியில் கேட்டிருப்பதாவது:—

"சேலத்து இரும்பைக் கொண்டு இங்கிலாந்தில் ஒரு பாலம் கட்டியதாக ஒரு பொறுப்பு வாய்ந்த பாராளு மன்ற உருப்பினர் பேசி வருகிறாரே அது உண்மையா, 'அது இங்குள்ள சேலமா, வேறு சேலமா" என்று கிண்டலாக—கேலியாக கேட்டிருககிறார்.

உடனே ஆளுங்கட்சி அங்கத்தினர்கள் சிரித்தார்கள்! ஒரு அறிஞர் கூறியிருக்கிறார் சிரிப்பது உடலுக்கு நல்லது என்று ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளாது, சொல்வதன் பொருளை அறிந்து கொள்ளாது தங்களை மேதாவிகள் என்று நினைத்துக் கொண்டு சிரிக்கிறார்கள் சிரிக்கட்டும், சிந்திக்க முடியவில்லையானாலும் சிரிக்கவாவது முடிகிறதே.

அந்த அங்கத்தினர் கேள்வி கேட்டதும் நமது மாநில தொழில் இலாகா அமைச்சர் வெங்கிட்டராமன் பதில் கூறும் போது

"இம்மாதிரி அந்தப் பாராளு மன்ற உறுப்பினர் பேசியிருப்பது தவறு. அவர் பேச்சு சர்க்கார் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது, இது ஆதாரமற்றது! நான் அதிகாரிகளையெல்லாம் விசாரித்தேன்! இதற்கு ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை! சேலம் என்று அமெரிக்காவிலோ, அல்லது மற்ற வெளி நாடுகளிலே இருந்திருக்கலாம் அங்கு இரும்பு கிடைத்திருக்கலாம் அதை வைத்துக் கொண்டு நம்நாட்டு சேலம் என்று நினைத்து பேசியிருக்கலாம்"

என்று அமைச்சர் கூறியதும் மீண்டும் நையாண்டிச் சிரிப்பு சிரித்திருக்கிறார்கள்

அமைச்சர் தான் கூறியபதிலால் ஏதோ நம்மை அடக்கி விட்டதாகவும் தனது அறிவின் திறமையைக் காட்டி விட்டதாகம் உண்மையைப் உணர்ந்து கொள்ளாது பதில் கூறியிருக்கிறார்

(10ம் பக்கம் பார்க்க)

வாழ்க ! வாழ்க !
இசையறிஞரே ! வாழ்க !

தமிழ்நாடு காங்கிரஸ் சமிட்டித் தலைவர் திரு ஓ. வி. அளகேசன் ஒரு பொதுக் கூட்டத்தில்—"அண்ணாதுரைககு இசை பாடத்தெரியாது, வசைபாடத்தான் தெரியும்" என்று கூறி தன்னை ஒரு மாபெரும் இசையறிஞராக அறிமுகம் செய்து கொண்டிருக்கிறார்!

அண்ணாதுரையைப் போல அடுக்கு மொழியில் பேச வேண்டும் என்பதற்காக—"இசை-வசை" என்று அடுக்கி இருக்கிறார்! சூடு போட்டுக் கொண்டால் பூனை புலியாகிவிட முடியுமா?

"இசையிலும் வசை பாட முடியும், வசையிலும் இசைபாட முடியும்" என்பதை தமிழ்நாட்டு ராஷ்டிரபதிக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொளளுகிறோம்!

எப்படியெனில் நீர் தினம். தினம் மேடையில் பேசி வருவதைத்தான் சான்றாகக் கொள்ள வேண்டும்!

சென்னையிலுள்ள 'ரௌடி'களையெல்லாம் தோற்கடிக்கும விதத்தில் பேசி வருவதுதான் இசையில - வசையாகும்! வாழ்க இசையறிஞரே! நீர் வாழ்க! உமது இசையும் வாழ்க!

தாக்கிப் பேசுவதையே தொழிலாகக் கொண்டுள்ள திரு. ஓ. வி. அளகேசன் நமக்கு புத்திமதி சொல்லுகிறார்! இதை பொது மக்களிடம் சொல்ல வேண்டும் என்பதே நமது ஆசையாகும்!

அடுத்த ஜனாதிபதியாக காமராஜர் வரலாம்!

நம்மையடக்க டெல்லி எதை வேண்டுமானாலும் செய்யும்!

(சம்பத் பேச்சு)

(9ம் பக்கத் தொடர்ச்சி)

நான் அறியாமலோ, புரிந்து கொள்ளாமலோ பேசியிருந்தாலும் கவலையில்லை. ஆனால் அவர் கூறியதில் தவறு ஏற்பட்டால் அவர்கள் நிலை என்னுவது அதிகாரம் அவர்கள் கையில் வைத்துக் கொண்டு இம்மாதிரி உண்மையை புரிந்து கொள்ளாது ஒரு அமைச்சர் பேசுவது சரியாகாது!

அதிகாரம் அவர்களிடம் இருப்பதால் எது வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைப்பது 'சரியாகாது

நான் சமீபத்தில் வேதாரண்யம்சென்று ஒருகூட்டத்தில் பேசினேன். அந்தக் கூட்டத்தில் சேலம் இரும்புபற்றிப் பேசினேன் அந்தப்பேச்சை நமது வேதரத்தினம் கேட்டிருப்பார் என்று தெரிகிறது அதற்கு மகிழ்கிறேன். நம் கூட்டத்திற்கு வருவதற்கான மனத்தெளிவாவது வந்திருக்கிறதே என்று நான் உண்மையிலேயே பெருமையடைகிறேன்

நான் சேலம் இரும்பு பற்றி சென்ற 7ம் தேதி பாராளுமன்றத்தில் பேசினேன். சேலத்தில் இரும்புகனிப் பொருள்கள் இருந்திருக்கிறது. அதை மேல் நாடுகளுக்குக் கொண்டு போய் பாலம் கட்டி இருக்கிறார்கள்என்றும் ஆதாரங்களைக் காட்டியும் பேசினேன்!

நான் பேசும் போது இரும்பு உருக்குத் தொழில் அமைச்சரும் இருந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

நான் பேசும் போது குறிப்பிட்டேன்!

"சேலம் மாவட்டத்தில் கிடைக்கப் பெறும் இரும்புக் கனிப் பொருளைக் கொண்டு சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவ வேண்டும்" என்று.

அதோடு நான் நிறுத்தவில்லை சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனியைக் கொண்டு மேல் நாட்டில் பாலம் கட்டியிருக்கிறார்கள் என்று நான் கூறியதற்கு ஆதாரமாக "இந்தியாவின் கனிவளங்கள்" என்ற பெயரால், சாகின் பிரௌன், ஏ. கே. டே என்ற இருவிஞ்ஞானிகள் எழுதிய புத்தகத்தைக் காட்டி, இந்தப் புத்தகத்தை ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகப் பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிறார்களென்றும் கூறியிருக்கிறேன். அதுமாத்திரமன்றி இது பற்றி எழுதியிருக்கும் பக்கத்தையும் கூறினேன் அதாவது 187 வது பக்கமென்று

இவ்வளவு கூறியதையும் கவனியாது, புரிந்து கொள்ளாது தங்களைப் பெரிய மேதைகளென்று நினைத்துக் கொண்டு, நியாயத்தையும் நேர்மையையும் உணர்ந்து கொள்ளாது அதைப் பற்றிக் கவலைப்படாது பேசுபவர்களைப் பற்றி என்ன நினைப்பது!

இதை யெல்லாம் தெரிந்து கொள்வதற்குப் புலமை தேவையில்லை! கொஞ்சம் கடமை உணர்ச்சியும் நேர்மையும் தான் வேண்டும்.

சுலபத்தில் ஒரு கேள்வியைக் கேட்டு அதற்கு கிண்டலாக பதில் கூறிவிட்டால் கடமை முடிந்து விடாது, அதனால் எனக்கு நஷ்டமும் ஏற்பட்டு விடாது

புக்காராவில் புதிதாக ரயில் பாதை ஏற்படுத்த திட்டமிடப்படுகிறது. இதுகாடு, இங்கு எந்த வசதியும் இல்லை. ஆனாலும் ரயில்பாதை அமைத்து தொழிற்சாலை அமைக்க முயற்சிக்கப்படுகிறது.

இது பற்றி நாம் கேட்டால் மௌனம் சாதிக்கிறார்கள்

நமது அமைச்சர்களுக்கு கொஞ்சமும் கவலையின்றி இருக்கிறார்கள்

இந்த நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட்கள் இப்போதுதான் நாம் கூறிவருவதை தெரிந்து கொண்டிருக்கிறார்கள்

மாநில அரசினருக்கு 'உரிமை கிடையாது, அவர்கள் அதிகாரத்தில் மத்திய அரசினர் தலையிட்டுவருகிறார்கள் என்று நமது கழகம் நீண்ட நாட்களாகக் கூறிவருகிறது

சமீபத்தில் டில்லியில் கூடிய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றும், மாநில அரசாங்கங்களின் உரிமையில் மத்திய அரசுதலையிடக் கூடாதென்றும், அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்றும் அந்தத்தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது

இவ்வளவு காலம் தாழ்த்தி தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் வாய்த்தது, கேரளாவில் கம்யூனிஸ்ட் அமைச்சரவையை டில்லி அதிகாரத்தால் கலைத்ததுதான் காரணம்

இன்று டில்லி அரசினரின் அதிகார வெறி, ஆதிபத்ய ஆசை அவைகளை யெல்லாம் மக்கள் நன்கு உணர ஆரம்பித்து விட்டார்கள்

அதை அகற்றத்தான் நாம் இன்று மக்களிடம் கூறிவருகிறோம்

திராவிட முன்னேற்றக் கழகம் இதை எடுத்துக் கூறுகிறதென்றால் இன்று நாட்டில் நடைபெறும் அக்கிரமங்கள் அநியாயங்களைத் தெரிந்துதான். புரிந்துதான், இன்று மாநில அரசுக்கு முனிசிபாலிட்டிக்குள்ளது போன்ற அதிகாரங்களைக் கொடுத்து வெறிச் செயலையும் பேராசைச் செயலையும் டில்லி அரசு செய்து வருகிறது, அது மாத்திரமன்றி, இன்று அதிகாரம் செலுத்துவது. ஒரு குறிப்பிட்ட இனம்! அவர்களிடம் நாம் சிக்கி இருக்கிறோம்!

நமது திராவிட முன்னேற்றக் கழகமும், நாமும் பல ஆண்டுகளாகக் கூறி வருகிறோம்! இந்தியா ஒரு தேசமல்ல! ஒரு தனிப்பட்ட வர்க்கத்தினர் வாழும் இடம். இந்தியத் துணைக் கண்டத்தின் சட்டங்கள் அதிகாரங்கள் ஒரு இனத்தவரின் பாதுகாப்பிற்காகவே வகுக்கப்பட்டிருக்கிறது, பொருளாதாரப் பிரச்சனையிலும் ஒரு இனத்தவரின் உரிமையைப் பாதுகாக்கும் படியான நிலை தான் இருக்கிறது. ஒரே இடத்தில் அதிகாரங்கள் குவியப்பட்டிருக்கிறது. பல திட்டங்களும் ஒரே இடத்தில் போடப்படுகிறது. பரவல் தன்மை உண்டாகவேண்டும்.

சமர்மத் திட்டங்கள் தங்கள் ஆட்சியில் இருப்பதாகக் கூறிக் கொண்டு ஜால வித்தைகள் செய்து வருகிறார்கள், எல்லா வகையிலும் சமதர்மத் திட்டங்கள் ஏற்பட்டு ஏழை மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான வகைகள் செய்ய வேண்டும்.

மாநில அரசினருக்கு எந்தவித அதிகாரங்களும் இல்லை, அதிலும் தென்னகத்தில், இருக்கும் அதிகாரங்களையும் பறித்துக் கொள்ளுகிறார்கள்,

ஆகவே இனி தெனகத்தின் லுள்ளவர்கள் ஒன்று பட வேண்டும். அவர்களெல்லாம் திராவிடர்கள் என்பதை உணரச் செய்ய வேண்டும்.

ஆந்திரம், கன்னடம், தமிழகம், கேரளம் ஆகிய பகுதிகள் மொழி வழியில் பிரிந்திருந்தாலும், இனத்தால் ஒன்றுபட்டவர்கள். ஆகவே அங்கெல்லாம் நாம் கூறும் கருத்துக்கள் பரவச் செய்ய வேண்டும். அங்கெல்லாம் நமது உணர்ச்சிகள் இப்போது பரவி வருகிறது.

நம்முடைய இந்த நல்ல முயற்சியைக் குலைப்பதற்காக சில தீயவர்கள் சில கேடான காரியங்கள்செய்துவருகிறார்கள்! மக்களின் கவனதனைத் திருப்ப வேறு வழிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்,

திராவிட முன்னேற்றக் கழகம் "திராவிட நாடு" பிரிய வேண்டுமென்று சொல்லி வருவதற்கு மாறாக "தமிழ் நாடு" வேண்டுமென்று கேட்கிறார்கள். இது மிகவும் பிற்போக்கான காரியமாகும்.

நாம் பெரிய லட்சியத்தை பரப்பி வருகின்ற இந்த நேரத்தில், சின்ன விஷயத்தைச் சொல்லி துவேஷத்தைப் பரப்ப எண்ணியுள்ளார்கள். இதனால் நமக்குக் கேடு ஒன்றும் நேரிடாதென்றாலும், இதனால் நாட்டில் தீய சகதிகளும், துவேஷ எண்ணங்களும், வெறுப் புணர்ச்சியும் பரவுவதற்கு வழி ஏற்பட்டு விடும்.

இன்று நாட்டில் ஒற்றுமை குறைந்து பிரிவினை வளர்வதற்கும் வித்திட்டு வருகிறார்கள்.

ஜாதியின் பெயரால் உரிமை கேட்க முனைகிறார்கள். வன்னியர்கள் என்றும், ரெட்டியார்களென்றும், நாயுடுகளென்றும், நாயக்கர்களென்றும் பலவித பிரிவினைகளைப் பிரித்து ஒவ்வொருவருக்குள் வெறுப்புணர்ச்சி ஏற்படச் செய்து வருகிறார்கள்.

மலையாளி, தெலுங்கன், கன்னடக்காரன் என்கிற பிரிவினையைப் பிரச்சாரம் செய்கிறார்கள் இதைச் செய்யக் கூடாது. மலையாளிகள் அதிக உத்தியோகங்களில் இருக்கிறார்கள், மேனன் சப்இன்ஸ்பெக்டராக இருக்கிறார், நாயர் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருக்கிறார் என்று கூறி துவேஷம் வளர்க்க சிலர் முயற்சிக்கிறார்கள் இதற்கென்று சில கட்சிகளும் பணியாற்றுகிறது இது கூடாது. நாம் இழந்த உரிமையை பெற பாடுபட்டு வருகிறோம், தேசிய விடுதலைக்காகப் பாடுபடவேண்டும்.

சில்லரை விஷயங்களை ஒதுக்கித் தள்ள வேண்டும்.

நாம் இப்படிக் கூறுவதால் நம்மை திராவிடர் கழகம் கேலி செய்கிறது! அதைப் பற்றி நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை!

நான் பாராளுமன்றத்தில் நெய்வேலியைப பற்றிப் பேசும் போது தென்னகம் எப்படி புறக்கணிக்கப்படுகிறது என்பது பற்றி சொல்லி வந்தேன்! அப்போது என் பேச்சை கூர்ந்து கவனித்து வந்த ஆந்திராவைச் சேர்ந்த வெங்கட சுப்பையா என்ற உறுப்பினர் என்னிடம் வந்தார், நீங்கள் பேசும் போது, சௌத் (தென்னகம்) என்று பேசியது மற்ற பகுதிகளைக் குறிக்கும்படி பேசவில்லையே உங்கள் பேச்சு சென்னையைப் பற்றி குறிப்பிடுவது போல் இருந்தது. இது நியாயமா என்று கேட்டார். ஆகவே நம் இனி எல்லாப் பகுதிகளைப் பற்றியும் பேச வேண்டும் ஆந்திர, மலையாள அங்கத்தினர்கள் பேசும் போது "சௌத்" என்ற பேச ஆரம்பித்து விட்டார்கள்.

மற்றும் திரு. தாணுப்பிள்ளை என்னை ஆதரித்துப் பேசுகிறார்.

நம்முடைய திராவிட நாடு விடுதலை அடைந்து சுதந்திரமாக இருந்தால், உலக வல்லரசுகளில் பெரிய வல்லரசாக இருக்க முடியும்.

ஒருமுறை பாராளுமன்றத்திலுள்ள அங்கத்தினர்களெல்லாம் பிலாய், துர்க்கா, பக்ராங்கல் போன்ற இடங்களிலுள்ள அணைக்கட்டுகளையும் தொழிற்சாலைகளையும் பார்வையிடச் செல்வதென முடிவு செய்தார்கள்!

இந்த ஏற்பாட்டை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஏற்பாடு செய்தார்கள். இங்கு சட்ட மன்றத்தில் திரு. கருத்

(11ம் பக்கம் பார்க்க)

ஜாதி வெறிகளைக் கிளப்பி ஒற்றுமையைக் கெடுக்காதீர்கள்; நல்லசக்திகள் வளரும் போது தீயசக்திகளைப் புகுத்தாதீர்கள்!

(சம்பத் பேச்சு)

(10ம் பக்கத் தொடர்ச்சி)

திருமன் கொரடாவாக இருப்பது போன்று அங்குள்ள கொரடா ஏற்பாடு செய்தார், உங்களுக்குத்தான் தெரியுமே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ரயிலில் செல்ல பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று மற்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுப்பார்கள், அது ஏற்பாடு செய்து விட்டு தென்னகத்திலிருந்து சென்றுள்ள அங்கத்தினர் ஒருவர் என்னிடம் வந்து, "நீங்களும், தர்பலிங்கமும் வர வேண்டும் நாங்கள் 25 பேர்கள் போவதென முடிவு செய்திருக்கிறோம். அது சௌத் மெம்பர்கள் (தென்னக அங்கத்தினர்கள்) ஒன்று சேர்ந்து செல்வதென முடிவு செய்திருக்கிறோம். அவசியம் வர வேண்டும் என்று கேட்டார்கள்.

இதிலுள்ள விஷயத்தைக் கவனியுங்கள்! "சௌத் மெம்பர்கள்" என்ற உணர்ச்சி, பாசம் வந்திருக்கிறது. மற்றும் அவர் சொன்னது நாம் அவைகளையெல்லாம் பார்த்து விட்டு, நம் பகுதிக்கும் தேவை யென்று சண்டை போட வேண்டும் என்று கூறினார்.

நான்கு மாநிலங்களும் ஒன்று அங்கு வதிவோர் ஒன்று என்று எண்ண வேண்டும் இது தான திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஜீவாதார லட்சியம். அந்த லட்யததை அந்தநான்குமாநிலத்தாரும் ஒப்புக் கொள்ளும் நிலை வந்து விட்டது;

இன்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருக்கும் திரு. சஞ்சீவரெட்டி, ஆந்திர முதலமைச்சராக இருந்த போது தென்னகம் புறக்கணிக்கப்படுவதை பலமாகக் கண்டித்திருககிறார். தென்னக உரிமைகளைப் பாதுகாக்க தென்னகத்தார் ஒன்றுபட வேண்டுமென அறைகூவல் விட்டுக் கொண்டிருந்தார்?

தென்னகத்தில் இந்தி புகுவதைப் பற்றி ஒருமுறையில் பேசும் போது "என் தலைமுறையில் இந்தியைப் புக விட மாட்டேன். அதற்கு என்ன பொருள் நான் இருக்கும் வரை இந்தியை எதிர்ப்பேன் என்று தானே அர்த்தம்,

வட நாட்டார் அவரது தன்மானத்தை அடக்க—அவரது சுயமரியாதை ஒடுக்க அகில இந்திய காங்கிரஸ் தலைமைப் பதவி கொடுத்து வாயடக்கி விட்டார்கள்.

அது போலவே தான் யார், யார் வடவரின் பாரபட்சத்தைக் கண்டித்து. தென்னகத்தின் உரிமைக்காக வாதாடுகிறார்களோ அவர்களுக்கு ஏதாவது பதவியைக் கொடுத்து இன உணர்ச்சியை அடக்கி விடுகிறார்கள்.

இன்னும் ஒன்றும் உங்களுக்குக் கூறுகிறேன், நான் கூறப் போவது உங்களுக்கு ஆச்சரியமாகவும் வேடிக்கையாகவும் இருக்கலாம், நான் சொல்லப் போவது அது நடக்கத் தான் போகிறது. இன்று தென்னகத்தில் கொழுந்து விட்டெறியும் இனவுணர்ச்சியைக் கண்டு வடவர்கள் அச்சம் கொண்டுள்ளார்கள். வடவர்கள் தென்னகத்துக்கு திங்கிழைக்கிறார்கள். என்ற எண்ணத்தை அவர்கள் நம்பிக்கையை தணிக்க ஒரு காரியம் செய்யப் போகிறார்கள், அதாவது இன்று இந்தியக் குடியரசுத் தலைவராக உள்ள ராஜேந்திர பிரசாத்திற்குப்பதில் முதலமைச்சர் காமராசருக்கு அந்தப் பதவியை அளிக்கப் போகிறாகள்,

இதைக் கேட்டதும் நீங்கள் மிகவும் ஆச்சரியப்படுவீர்கள்! இது நடக்கத் தான் போகிறது; அப்படிச் செய்து விட்டால் வடவர் மீதுள்ள வெறுப்பு தென்னகத்தாருக்கு நீங்கி விடுமென நினைக்கிறார்கள்! நினைப்பதை நினைத்துக் கொள்ளட்டும். அது பற்றி கவலையில்லை! அவர்கள் நிலையை உங்களுக்குக் கூறுகிறேன்!

இன்று தென்னாப்பிரிக்காவில் விடுதலைப் போர் நடந்து வருகிறது.

அந்த விடுதலைப் போரைப் பற்றி நமது நாட்டிலுள்ள செய்தித் தாள்கள் செய்திகளைப் பிரசுரிக்கும் போது "கருப்பர்கள்" என்று கூறி வெளியிடுகிறது.

இது எவ்வளவு கேவலமானது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

அவர்கள் கருப்பர்களென்றால் நாம் என்ன கடைந்தெடுத்த தங்கமா?

இப்படியெல்லாம் இழிவாகச் செய்திகளைப் போடக் கூடாது,

அங்கு நடைபெறும் தேசியப் போரைப் பார்த்து நாம் வெட்கப்பட வேண்டும்.கேலி செய்யக் கூடாது.

அங்கு நடைபெறும் அக்கிரமங்களைக் கண்டு கவலைப்பட வேண்டும்.

அவர்களைக் கருப்பர்கள் என்று கூறி விட்டோம்! அந்தக் கருப்பர்கள் செய்யும் போராட்டத்தைப் பார்த்து நம் முகத்தில் நாம் கரியைத் தான் பூசிக் கொள்ள வேண்டும்!

அங்குள்ளவர்கள் துப்பாக்கிகளுக்கு முன்னும், பீரங்கிகளுக்கு முன்னும் தங்களது நீளமான கைகளை நீட்டிக் கொண்டு விடுதலைப் போர் செய்கிறார்கள்!

இங்கே திண்ணையில் உட்கார்ந்து கொண்டு வேதாந்தம் பேசிக் கொண்டிருக்கிறோம்!

நமக்கு உணர்ச்சி ஏற்பட வேண்டும்!

உங்களிடம் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன்! அதைக் கேட்கும் போதே நீங்கள் வெட்கப்பட வேண்டும்.

இன்று டில்லிபாராளுமன்றத்தில் தில் பட்டேல் படம்,திலகர் படம் காந்தி படம், தாகூர் படம், ஆசாத் படம், லாலாலஜபதிராய் படம் இப்படி பல படங்கள் தொங்கிக் கொண்டிருக்கிறது. ஏன் தென்னகத்திலுள்ளோர் படங்கள் தொங்க விடுவதில்லை,

வட நாட்டிலுள்ளவர்களை விட தென்னகத்திலுள்ளோர் செய்த தியாகங்கள் குறைவானதா? 'கப்பலோட்டியவர் செக்கிழுத்தவர் வா. வு. சிதம்பரம் படம் இல்லை; கொடி காத்து உயிர் நீத்தவர் குமரன் படமில்லை! நமது முதலமைச்சர் காமராசர் படமில்லை! சத்திய மூர்த்தி படம் கூட வைக்க முயற்சித்தார்கள் முடியவில்லை! நான் கூட அவர்களிடம் கூறினேன் சத்திய மூர்த்தி படம் வைக்க அனுமதி வாங்குங்கள் நான் வேண்டுமானால் 50 ரூபாய் நன்கொடை தருகிறேன் என்று சொன்னேன்! ஆனால் அவர்கள் எண்ணம் பலிக்கவில்லை!,

இதை நினைக்கும் போது நமக்கு தென்னாடு, வடநாடு உணர்ச்சி ஏற்படுமா? ஏற்படாதா?

இந்த உண்மையை நாம் கூறும் போது அவர்களுக்குக் கசப்பாக இருக்கிறது. இதை கசப்பான உண்மையாகக் கருதுகிறார்கள். நம்மீது கோபப்படுகிறார்கள்.

இன்று ஆப்பிரிக்காவில் நடைபெறும் காட்டு மிராண்டிச் செய்கையை எங்கும் கண்டிக்க ஆரம்பித்து விட்டார்கள், உலக நாடுகளெல்லாம் அங்கு நடைபெறும் இனவெறியையும், விடுதலைக்காகப் பாடும் வீரர்களை அடக்க முற்படும் ஆட்சித் திமிரையும், அடக்குமுறையையும் கண்டிக்க முன் வந்து விட்டார்கள்!

அது மாத்திரமல்ல! ஐக்கிய நாடு சபையிலும், தானாகவே அங்கு நடைபெறும் அக்கிரமத்தைப் பற்றிக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

தென்னாப்பிரிக்காவிலுள்ளோர் ஐ. நா சபையை அணுகவில்லை! நீதியை மனதில் கொண்டு, நேர்மையை நினைவில் கொண்டு ஐ. நா, சபையே கண்டித்து விட்டது!

திராவிட முன்னேற்றக் கழகம் ஐ. நா. சபை வரை சென்று நாட்டு நாட்டைப் பிரிப்போம் என்று சொன்ன போது நம்மைக் கிண்டலும் கேலியும் செய்தார்கள். "இவர்களாவது-ஐ. நா, சபைக்குப் போவதாவது" என்று.

விமானத்தில் பறந்து சென்று அங்கு போய் நாங்கள் கூற வேண்டியதில்லை!

இங்குள்ள உணர்ச்சியைக் கண்டு, நாம் போரிடும் முறையைக் கண்டு நமக்குத் தானாகவே ஆதரவு தருவார்கள். நியாயத்திற்கு எந்த நாட்டினரும் செவி சாய்ப்பார்கள்! ஆகவே முன்னேற்றக் கழகம் கேலி செய்வதற்காக அஞ்சி விடாது!

முன்னேற்றக் கழகம் சொல்வதை ஆதரிக்காது அதனுடன் சேர மறுத்தவர்கள், இருபதடி தள்ளி நின்றவர்கள், முன்னேற்றக் கழகக் கொடியையும் சேர்த்துப் பிடித்து வரும் நிலைக்கு வந்து விட்டார்கள்!

ஆகவே நாம் இனி நமது முழக்கங்களை மற்ற மாநிலத்தார் அதாவது ஆந்திரம், கன்னடம் கேரளம் ஆகிய பகுதிகளில் இருப்பவர்கள் உணரும்படி பாடுபட வேண்டும்! நமது மாநில மாநாடுகளுக்கு அவர்களையும் அழைத்து வர வேண்டும், இப்போதுள்ள நமது குடும்பத்தை விரிவு படுத்த வேண்டும்! பெரிய குடும்பமாக்க வேண்டும்! நாம் ஒற்றுமையுடனும், கண்யத்துடனும்; கட்டுப்பாட்டுடனும் பணியாற்றினால் நிச்சயம் நாம் நமது நாட்டை அடைந்தே திருவோம்!

செங்கற்பட்டு மாவட்டத்தில் மாற்றுக் கட்சியினர் நடந்து கொள்ளும் முறையைப் பற்றி பலர் என்னிடம் கூறினார்கள் அங்கு அதிகாரிகளின் துணை கொண்டு காங்கிரஸ்காரர்கள் நமது தோழர்களிடம் மிக இழிவாக நடந்து கொண்டு வரு

(12ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழில்

நாத்திகமா? ஆத்திகமா?

சிறப்புக் கட்டுரை வெளிவரும்!

வாசகர்களே! படிக்கத் தவறாதீர்கள்!

Registered asa a News Paper in CEXLON
Regd. No.M.7074 **MALAIMANI** விலை 16 காசு Phone No.83285
இலங்கையில் 20 சதம்

நம்மோடு சேர மறுத்தவர்கள் இன்று நம் கொடி ஏந்தி வருகிறார்கள் !

(சம்பத் பேச்சு)

(11ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்கள் அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்!

நமது அறிஞர் அண்ணா அவர்களையும். நாவலர் நெடுஞ்செழியன் அவர்களையும், கருணாநிதி அவர்களையும், என்னையும் மற்ற தோழர்களையும் மோசமாகத் தாக்குவதாகவும் கூறினார்கள்.

தாக்கட்டும் அதனால் நாங்கள் ஒழிந்துவிட மாட்டோம்!

பக்தவச்சலம் போலீஸ் அமைச்சராக இருக்கிறார் என்பதற்காக—அந்த தயவை—உறவைக் கொண்டு அடக்கி, இச்சித்து கழகத்தை ஒழித்துவிட நினைத்தால் அது வெற்றி பெறாது! நீங்கள் எது வேண்டுமானாலும் செய்து பாருங்கள்!

நமது தோழர்களை பழி வாங்குவதாகவும், பல தொல்லைகளுக்கு உட்படுத்துவதாகவும் கேள்விப்படுகிறேன்! இது இப்படியே போய் கொண்டிருந்தால் அதற்கும் ஒரு முடிவு ஏற்படும் காலமும் வரும்!

நான் நமது அண்ணாவிடம் செங்கற்பட்டு மாவட்டத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தேன் அவர் மிகவும் கவலைப்பட்டார்.

எங்களிலேயே மிகவும்பொறுமையாக எதுவும் செய்பவர் நமது அண்ணா. அவரே ஆத்திரப்பட்டார் என்றால் நிலைமையைப் பற்றி சிந்தித்துக் கொள்ளுங்கள்.

இங்கு 'இந்தக் கூட்டம் நடைபெறும் நிலையைக் கூட பாருங்கள். ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கூறினாராம். "மக்கள் கேட்க முடியாதவாறு இழிவான முறையில் பேசுகிறார்கள் அதனாலேயே தெருக்களில் கூட்டங்கள் நடத்த அனுமதிக்க மறுக்கிறோம்" என்று நாங்கள் அப்படிப் பேசவதில்லையே, எங்கள் கூட்டங்களில் மக்கள் மனம் புண்படும்படி பேசமாட்டோமே என்று நமது தோழர்கள் கூறியதற்கு—"உங்கள் கூட்டத்தில் அல்ல. உங்கள் கூட்டம் முடிந்து உங்களுக்கு பதில் சொல்பவர்கள் அப்படிப் பேசுகிறார்கள்" என்று சொன்னாராம்!

பொல்லாதவனை— தன் மார்க்கனை அடக்குவதற்குப் பதில் நல்லவனைப் பார்த்து நீ நாட்டில் நடமாடாதே என்று கூறுவது போல் இருக்கிறது!

இந்த நிலை சாக்காருக்கு மிகவும் கெட்ட பெயர்தான் உண்டாக்கும்!

இதெல்லாம் 1962ம் வருடத் தேர்தலில் நம்மை நடமாடச் செய்யக் கூடாதென்பதற்கே இம்மாதிரி செய்து வருகிறார்கள். இந்த மாதிரி காட்டுக் குணத்தால் நாட்டு மக்களிடம் நமக்கிருக்கும் பற்றை மாற்ற முடியாது!

எங்கும் நமது பலம் பெருகிக் கொண்டு வருகிறது. சில தீய செயல்களால—பொல்லாத எண்ணங்களால் அழிக்க நினைத்தால்—அந்த மாதிரி செயலில் ஈடுபட்டால் அழிவீர்கள். மக்களே உங்களை அழிப்பார்கள்! இதை நன்கு உணருங்கள்.

இன்று சில பத்திரிகைகள் மிக ஆபாசமான முறையில் நடந்து வருகிறது!

சிண்டு முடிப்பதிலும், தகராறுகளை வளர்ப்பதிலும் முனைந்திருக்கிறது! இன்று அரசியலில் மஞ்சல் பத்திரிகைகள் தோன்றி குழப்பம் செய்து வருகிறது! "சம்பத் கடிதம்" சம்பத் கட்சியிலிருந்து விலகுகிறார்" என்றெல்லாம் செய்திகளைப் போட்டு நிரப்பி வருகிறார்கள்! இவர்கள் செய்கையால் இவர்கள் நினைப்பது நடந்து விடாது. ஏமாந்து தான் போவார்கள்! உண்மையை மறைக்க நினைக்கிறார்கள்! இதனாலெல்லாம் ஒரு அரசியல் கட்சி அழிந்து விடாது.!

சுடுகாட்டுப் பக்கத்தில் வாழ்ந்து வரும் நரி, யார் வீட்டிலாவது இழவு விழுந்து பிணம் வராதா !என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில் தனக்கு ஆகாரம் வேண்டுமென்று அந்த மாதிரி சில அரசியல் சுடுகாட்டு நரிகளும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் ஆசை நிறைவேறாது இந்த சபலப் புத்திக்காரர்கள் ஏமாறத்தான் போகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் எந்த குழப்பமும் ஏற்படச் செய்து அதை அழிக்க முடியாது, ஆகவே நமது பணிகள் ஏராளமாக இருக்கிறது. அதில் நாம் நம் கவனத்தைச் செலுத்த வேண்டும்! வீணாக இந்தத் தரங்கெட்டுத் திரிபவர்களைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம்!

ஆகவே நீங்கள் எல்லாம் நமது கழகத்தின் வளர்ச்சிக்கானவகையில் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இவ்வளவு சிரமத்துடன் பொறுமையாக இவ்வளவு நேரம் கேட்டுக் கொண்டிருந்த உங்கட்கு எனது நன்றியும், வணக்கமும் கூறி முடிக்கிறேன்.

வணக்கம்

வீட்டில் அடங்கி இருந்தது போதும்

மக்கள் பணி செய்ய மகளிர் ஒன்று சேருங்கள்

ராணி அண்ணாதுரையின் அழைப்பு!

சென்னை மேற்குப் பகுதி மகளிர் மன்றத்துவக்கு விழா, சென்ற 22-4-60 தேதி பெரம்பூர் ஏரி மைதானத்தில் நடைபெற்றது. அது சமயம் விழாவிற்குத் தலைமை தாங்கிய திருமதி. ராணி அண்ணாதுரை பேசியதாவது;—

அன்புள்ள தாய்மார்களே, பெரியோர்களே! மேற்பகுதி மகளிர் மன்றம் இன்று துவக்கப்படுகிறது.

இதற்கு முன் இரண்டு பகுதிகளில் துவங்கியிருக்கிறோம்! பெண்களாகிய நாம் வீட்டில் அடங்கி இருந்தது போதும். இனி நமது நாட்டு விடுதலைக்காக நமது பங்கை செய்ய வேண்டும். இந்த மகளிர் மன்றம் மாநிலமெங்கும் பரவும் படி செய்ய வேண்டும், மாநிலத்திலுள்ள தாய்மார்களை ஒன்றுபடுத்தி, நமது முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களை பரப்ப பாடுபட வேுண்டும், வெகு வரைவில் மகளிர் மன்ற மாநில மாநாடு நடத்தப்படும் எல்லாத் தாய்மார்களும் அதற்கு தக்க ஆதரவு தர வேண்டும். இன்றுள்ள இழிநிலை போக்க தாய்மார்களாகிய நாம் மிக தீவிரமாகப்பாடுபட வேண்டும்!

சோகம்! சோகம்! சொன்னாலே சோகம்!

ஆண்டுக்கு, ஆண்டு வரிமேல் வரியை விதித்து ஏழைகளிடம் கசக்கிப் பிழிந்த வரிப்பணத்தையெல்லாம் சர்க்கார் எப்படி, எப்படி பாழாக்கி வருகிறது. என்பதை நினைத்தால் நெஞ்செல்லாம் வெடித்துவிடும் போலிருக்கிறது!

இந்த ஆண்டு மக்கள் சபையில் சமர்பிக்கப்பட்ட தணிக்கை அறிக்கைபடி இரயில்வே நிர்வாகத்தில் மோசடி நடந்தது 56-59 இலட்சமாகும்.

ஏன்?

1955 ஜூன் முதல் 1958 மே வரையில் மத்திய ரயில்வே வாடி பந்தர் ஸ்டேஷனில் சாமான்கள் இறக்கவும் ஏற்றவும் ஒரு காண்டிராக்டருக்கு 35 இலட்சத்திற்கு மேல் அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறது!

எதற்காக?

வட கிழக்கு ரயில்வே ஒப்பந்தப் புள்ளி கோருவதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் இரண்டு இலட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரம் நஷ்டம் உண்டாயிற்று!

யார் வீட்டுப் பணம்?

தென்கிழக்கு ரயில்வேயில் ஒரு திட்ட வேலையில் மண்வாரும் வேலைக்கு ஒழுங்கான நிர்யணயம் இல்லாத காரணத்தால் ஏறத்தாழ 1½ இலட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது!

இதுவா நிர்வாகம்?

1955-56ம் ஆண்டில் மட்டமான மரம் சப்ளை செய்யப்பட்ட காரணத்தால் மத்திய ரயில்வேக்கு இரண்டு இலட்சமும், மேற்கு ரயில்வேக்கு 56,000 ரூபாயும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது!

இதற்காக சம்பளம்?

மேற்கு ரயில்வே தாவர எண்ணெய் வாகயில் ரூ 40.000 நஷ்டம்! கிழக்கு ரயில்வேயில் 50,000 நஷ்டம்!

இப்படி இலட்சம், இலட்சமாக பாழாக்குவதற்குதான் சுதந்திரம் வாங்கினீர்களா? பாரத மாதா புதல்வர்களே பதில் சொல்லுங்கள்!

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும்: பி. எஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ்,
404, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5. அலுவலகம் 1-35, வாணியர் தெரு, சென்னை-14.